பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

மஜ்மூஹெநத்ருன்னவாதிருத்தெனும்

நவீனவாசகத்திரட்டு

இதை

கும்பகோணத்தைச் சேர்ந்த வலங்கிமான் மதரஸே

மஸ்ஜிதிய்யாவின் உஸ்த்தாது மலையாளம் மம்பாடெனும்

ஊருடைய திருவுண்டிக்கல்

பிரிஞ்சி அஹமதிப்னு முகம்மது சாகிபு

அவர்களாலியற்றப்பட்டது.

கும்பகோணம்

லெக்ஷிமிவிலாஸ அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

காப்பிரைட்] 1918. [ரிஜிஸ்ட்டர்

Rj:417
N18
183492

நவீன வாசகத்திரட்டு.

அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன் வஸ்ஸலாத்து
வஸ்ஸலாமு அலா ஸய்யிதினா முகம்மதின் வஅலா ஆலி
ஸஹ்பிஹி அஜ்மயீன்.

அம்மாபஃது ஸஹ்றத்துற்றியாலெனும் கிதாபில் வரு
கிறது கியாமத்து நாளானால் ஸய்யிதினா அபூபக்கர் ஸித்தீகு
றலியல்லாகு அன்கு அவர்களுக்கு உண்மை என்னும்
கொடியும் அலிறலியல்லாகு அன்கு அவர்களுக்கு ஷஹா
தத்தென்னும் கொடியும் பிடிக்கப்படும் உண்மை சொன்ன
வன் அடங்கலும் அபூபக்கர்றலியல்லாகு அன்கு அவர்களு
டைய கொடியின் கீழும் நீதம் செய்தவன் அடங்கலும்
உமர்றலியல்லாகு அன்கு அவர்களுடைய கொடியின்கீழும்
ஸகாவத்து கொடுத்தவன் அடங்கலும் உத்மான்றலியல்
லாகு அன்கு அவர்களுடைய கொடியின்கீழும் ஷஹீதான
வர்களடங்கலும் அலிறலியல்லாகு அன்கு அவர்களுடைய
கொடியின் கீழும் பிக்ஹுடைய உலமாக்களடங்கலும்
மஆதிப்னுஜபல்றலி யல்லாகு அன்கு அவர்களுடைய கொடி
யின்கீழும் துன்யாவை வெருத்த ஸாஹிதீங்கள் அடங்கலும்
அபூதர்றலியல்லாகு அன்குஅவர்களுடைய கொடியின்கீழும்
பக்கீர் அடங்கலும் அபூதர்தாறலி யல்லாகு அன்கு அவர்க
ளுடைய கொடியின் கீழும் குற்ஆன் ஓதிக்கொடுத்தவர்கள
டங்கலும் உபையிப்னிகஃபு றலியல்லாகு அன்கு அவர்களு
டைய கொடியின் கீழும் முஅத்தினடங்கலும் பிலால்றலி
யல்லாகு அன்கு அவர்களுடைய கொடியின் கீழும் அன்
பாயமாய் வெட்டுப்பட்டவர்களடங்கலும் ஹுஸைன்றலி
யல்லாகு அன்கு அவர்களுடைய கொடியின் கீழுமிருப்

பார்களென்று அல்யெளம அக்மல்த்துலக்கும் தீனக்குமெ ன்னும் ஆயத்திறங்கின நாள் 5 பெருநாளாயிருந்தது. அதில் 1வது மிஸ்கீன்களுக்கு பெருநாளாகிய வெள்ளிக்கிழமை 2வது அறபா, 3வது யெஹூதிகளுக்கு பெருநாள், 4வது நஸாறுக்களுக்கு பெருநாள், 5வது மஜூஸிகளுக்கு பெரு நாள், எல்லா மார்க்கக்காரருடைய பெருநாள்களும் இப்படி இதற்கு முன்னும் பின்னும் ஒன்று சேரவேயில்லை.

ஆண் பிள்ளைகளில் தன்னை நபியென்று பொய் வழக் குறைத்தவர்களில் முந்தினவன் முஸைலமத்துல் கத்தாப் 2வது நபிநாயகத்துக்கு வஹீ எழுதுகிற அப்துல்லாஹிப்னு ஸஃதிப்னு இவர் வலகத்ஹலக்னல் இன்ஸானமின்ஸுலா லத்தின் என்னும் ஆயத்திரங்கியதை எழுதிக்கொண்டு தும் மஅன்ஷஃனாஹு ஹல்கன் ஆஹற என்றெழுதவே அவர் ஆயத்துடைய சேதியைப்பார்த்து புதுமைப்பட்டு பதபா றகல்லாகு அஹஸனுல்ஹாலிக்கீன் என்று சொன்னார்.

ஆயத்துடைய முடிவும் அப்படித்தான் இறங்கினது. அது கொண்டவர் பிரண்டு கெட்டு முற்த்தத்தாகி முஷ் ரிக்கீன்களுடன் சேர்ந்துக்கொண்டு பிறகு மக்கம் பத்ஹான நாள் நாயகத்திடம் வந்து இஸ்லாமில் மீண்டார் றலியல்லாகு அன்கு 3வது மக்கத்து முஷ்ரிகீன்கள் நாங்கள் இந்த குர் ஆனைப்போல் சொல்வோமென்றார்கள். நபிமார்களுடைய ஸலாமுக்கு புறத்தி சொல்லாதிருந்தது. 1வது மூசா அலைகிஸ்ஸலாம் நாயனிடம் வஸனிக்கபோகும் வழியில் பெரிய ஓர் ஒலியைக்கண்டு ஸலாம் சொன்னதற்கு அவர்கள் யாதொன்றும் சொல்லவில்லை பிறகு மூஸா அலைகிஸ்ஸலாம் அல்லாகுத்த ஆலாவுடன் வஸனிக்கும்போது நாயனே நான் வரும் வழியில் ஓர் ஒலியைக்கண்டு ஸலாம் சொன்னதற்கு அவர் யாதொன்றும் சொல்லவில்லை என்றார்கள். அதற்கு நாயன்; அவர் அப்படித்தான் 5, 6 நாளாக நம்முடனும் பேச்சுவார்த்தை யில்லை. ஏனெனில் அவர் ஹல்குகளுடங் கலுக்கும் பிழை பொறுக்கும்படியாக சொல்லுகிறாரெ ன்றான்.

வேறொரு தடவை மூசா அலைஹிஸ்ஸலாம் ஆண்டவனிடத்தில் ஹல்குகளை படைத்து காலமெல்லாம் உன்னுடைய நிஃமத்தை கொடுத்து அவர்களை வளர்த்து கடைசி கியாமதகில் ஏன் அவர்களை நீ நரகத்தில் தள்ளுகிறாயென்று கேட்டார்கள். அதற்கு நாயன் சொன்னான் மூஸாவே நீர் ஒரு பயிர் செய்யுமென்றான். அவர்கள் பயிர்செய்து தண்ணீரும் கட்டி வளர்த்து பின்பு அறுத்து அடித்து வைத்துக்கொண்டார்கள். பின்பு நாயன் கேட்டான் மூசாவே உம்முடைய பயிரை என்னசெய்தீர் என்று கேட்டான். அவர்கள் எல்லாவற்றையும் அருத்தெடுத்துக்கொண்டேன் என்றார்கள். அப்போது நீர் ஒன்றையும் விடவில்லையா என்று நாயன் கேட்டான். அதற்கவர்கள் உதகினதை பத்திரப்படுத்திக்கொண்டேன் உதகாததை விட்டுவிட்டேன் என்றார்கள். அப்போது நாயன் சொன்னான் கலிமாவுக்கு தவினவனை நானும் சொர்க்கத்தில் பத்திரப்படுத்திக்கொண்டேன் உதகாத்தவனை நரகத்தில் விட்டுவிட்டேனென்றான் என்று ரிவாயத்து செய்யப்பட்டிருக்கின்றது. 2வது ஒரு மலக்காயிருக்கும் அவர் 1000 வருஷத் தடிப்பாடுள்ளவர் ஸித்றத்துல்முந்தஹாவென்னும் மரத்தின்கீழ் அல்லாகுத்தஆலா படைத்துவைத்திருக்கின்றான். மிஃறாஜிரவில் நாயகம் ஸல்லல்லாகு அலைகிவஸல்லம் அந்தமலக்குக்கு ஸலாம் சொன்னார்கள். அவர் அற்ஷு அசையும்படியாக அல்லாகுத்தஆலாவை தஸ்பீஹு செய்துகொண்டிருப்பதால் நாயகம் ஸலாம் சொன்னது அவர் கேட்கவில்லை. அப்பொழுது முகம்மது உம்மபேரில் ஸலாம் சொல்லுகிறாரென்று ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அந்த மலக்குக்கு சொன்னவுடன் அவருடைய பச்சையாகிய இரண்டிறகையும் வானம்பூமி ரொம்புராப்போல் விரித்து நாயகத்துடைய இருகண்ணுக்கிடையில் முத்தமிட்டு முகம்மதே உமமுடைய நாயன் உமக்கும் உம்முடைய உம்மத்துகளுக்கும் றமலான் மாதத்தின் பறக்கத்தைக்கொண்டு பிழை பொறுப்பானாகவும் நீர் நல்மாறாயம் பெறுமென்றார்.

இன்னுமவரிடத்தில் ஒளியினால் 1000 பூட்டுபோட்டு பூட்டப்பட்ட 2 பெட்டியைக்கண்டு அதைத் தொட்டும் கேட்டார்கள். அதற்கு அதில் உம்முடைய உம்மத்துகளில் றமலான்மீ நோன்புவைத்த நோன்பாளிகளுக்கு ஈடேற்றமுண்டாயிருக்கின்றது. நான் அதற்கு சாட்சியாயிருக்குமென்னூர் என்று நாயகம் திருவிழுமானூர்கள். இன்னும் ரவவியிமாம் தங்களுடைய கிதாபில் எழுதியிருக்கிறூர்கள். மனிதருக்கெல்லாம் தலைமை ஆதம் அலைஹிஸ்ஸலாமாயிருக்கும் அறபிகட்குத் தலைமை முஹம்மது றசூலுல்லாஹி ஸல்லல்லாகு அலைஹிவஸல்லமாயிருக்கும் பார்ஸிகட்குத் தலைமை ஸல்மான்பார் ஸீறலியல்லாகு அன்குவாயிருக்கும் றூமிகட்குத் தலைமை ஸுஹைபுறலியல்லாகு அன்குவாயிருக்கும் ஹபஷிகட்குத் தலைமை பிலால் றலியல்லாகு அன்குவாயிருக்கும் ஊர்கட்குத்தலைமை மக்கா முஹல்லமாவாயிருக்கும் ஓடைகளுக்குத் தலைமை பைத்தல் முகத்திஸுடைய ஓடையாயிருக்கும் நாட்களுக்கு தலைமை ஜும்ஆ நாளாயிருக்கும் இரவுகட்குத் தலைமை லைலத்துல்கதுருடைய இரவாயிருக்கும் வேதங்களுக்குத் தலைமை குர்ஆனுயிருக்கும் சூறத்து பகறுவுக்குத் தலைமை ஆயத்துல் குர்ஸியாயிருக்கும் கற்களுக்குத் தலைமை ஹஜறுல் அஸ்வதெனும் கல்லாயிருக்கும் கேணிகட்குத் தலைமை ஜமஜம் கிணறுயிருக்கும் கம்புகளுக்குத் தலைமை மூஸா அலைஹிஸ்ஸலாமுடைய அஸாகம்பாயிருக்கும் மீன்கட்குத் தலைமை யூனுஸு அலைஹிஸ்ஸலாமை முழுங்கிய மீனுயிருக்கும் ஒட்டகங்கட்கு தலைமை ஸாலிஹு அலைஹிஸ்ஸலாமுடைய ஒட்டகையாயிருக்கும் குதிரைகட்குத் தலைமை புறுக்காயிருக்கும் மோதிரங்களுக்குத் தலைமை சுலைமான் அலைஹிஸ்ஸலாமுடைய முத்திரை மோதிரமாயிருக்கும் மாதங்களுக்குத் தலைமை றமலான் மாதமாயிருக்குமென்றும் இன்னும் அந்த மாதத்தின் முந்தின 10 றஹ்மத்தாகவும் நடு 10 பிழை பொருக்கப்படுகிறதாகவும் கடைசி 10 உருமை விடப்படுகிறதாகவுமிருக்கும்.

இன்னும் அந்த மாசத்தில் கடைசி 10 நாளும் அதி
லும் 21லும், 23லும், 25லும், 27லும், 29லும் லைலத்துல்
கத்ரை தேடுங்களென்று நாயகம் ஸல்லல்லாகு அலைகிவஸல்
லம் திருவுளமானார்கள். இன்னும் ஷை இரவைத்தொட்
டும் நாயகத்திடம் அபூஸயீது றலியல்லாகு அன்கு கேட்ட
தற்கு அது 21லாயிருக்குமென்றார்கள் அலி றலியல்லாகு
அன்கு கேட்டதற்கு 23லாயிருக்குமென்றார்கள். அபூ
பக்கர் ஸித்தீக்கு றலியல்லாகு அன்கு கேட்டதற்கு 27
லாயிருக்குமென்றார்கள். ஆகையால் அது கிலாபாயிருக்
கும் அபூஹனீபா றஹ்மதுல்லாவும் மிகுந்த உலமாக்களும்
27 கொண்டு ஒத்துமையாயிருக்கிறார்கள்.

இன்னும் தேசங்கள் தோறும் அதன்படியே அமல்
நடந்துவருகின்றது. இன்னும் சூறத்துல் கத்ரில், லைலத்
துல் கத்ரென்கிற சொல்லை மடக்கி மடக்கி 3 விடுத்தம்
சொல்லப்பட்டிருக்கிறது. அந்த சொல்லுடைய எழுத்து
கள் 9 ஆயிருக்கும் முவ்வொன்பது 27 ஆயிருக்கும். இனி
நபிமார்கள் ஸகாத்து கேட்டனுப்பினதற்கு கொடுக்காதிரு
ந்தவர்களில் 1வது காறூனாயிருக்கும் அவனிடத்தில் மூஸா
அலைகிஸ்ஸலாம் ஸகாத்து கேட்டதற்கு கொடுக்காதிருந்த
தும் தவிர அவர்கள்பேரில் பெரிய படுதூறை இழுத்து
விட்டு அதனால் பத்துவா விலகப்பட்டு பூமிக்குள் அவனை
யும் பிற்பாடு அவனுடைய பொருளையும் சரிய வாங்கப்பட்
டது. 2வது நமது நாயகம் ஸல்லல்லாகு அலைகிவ ஸல்ல
முடைய காலத்திலுண்டாயிருந்த துஃலபாவென்பவராயி
ருக்கும். அவர் எப்போதும் றசூல்ஸல்லல்லாகு அலைகி
வஸல்லமுடைய மஸ்ஜிதைப்பத்திப் பிடித்தவறாகவும்
சுப்ஹூ தொழுதவுடனே இஸ்திஃபாரும்து ஆவும் ஓதா
மல வீட்டிற்கு போரவறாகவுமிருந்தார். ஒரு நாள் நபி
நாயகம் ஸல்லல்லாகு அலைகிவஸல்லம் நீர் என் முனாபிக்
கீன்களைப்போல் பள்ளிவாசலை விட்டும் சுருக்கில் வெளியிற்
புறப்பட்டு போரீரென்றதற்கு அவர் சொன்னார் நான் மெத்
தமிடுமையாளனாயிருக்கிறேன், . . . என் பெஞ்சாதிக்கும்

எனக்கும் ஒரு புடவைதானிருக்கிறது. அவள் புடவை யில்லாமல் தொழாதிருப்பாள் என் புடவையைக் களைந்து கொடுக்கப்போவேன். ஆகையால் பணம்வர எனக்கு துஆ கேளுங்களென்று சொன்னார். அப்போது நபிநாயகம் சொன்னார்கள் நீர் அல்லாகுத்த ஆலாஉடைய நபியைப் போலிருக்கிறதை பொருந்தவில்லையா என்றார்கள்

அதற்கவர் சொன்னார் உங்களை நபியா அனுப்பினவன்பேரில் ஆணையாக எனக்குப் பணம் வந்தால் ஹக்குபோல் நடப் பேன் என்றார். நபிநாயகம் அவருக்கு துஆ கேட்டார்கள் அவர் ஆடு வாங்கினார் அந்த ஆடு மதீனா நிறம்பமட்டும் புழுக்கள் பெருகுமாப்போல் பெருகிவிட்டது. அவர் ஆடு மேய்கக ஓடக்கரைக்குப் போனதில் அஸ்ரும் லுகரும் தவிர மற்ற ஜமா அத்து அவருக்குத் தப்பிவந்தது. அதன் பிறகு கிடைகள் பெருகவே அந்தவிடம் காணாமல் தூர மாய் போனதில் ஜமா அத்துக்கும் ஜும் ஆவுக்கும் வராம லானார். ஒரு நாள் நபி நாயகம் அவரை விஜாரித்ததில் அவருடைய ஹாலே சொல்லப்பட்டது.

நபிநாயகம் அதைக்கேட்டு தஃலபாவுக்கு என்ன கேடாச்சுதென்றார்கள். அதின்பிறகு ஸகாத்து வாங்கும் படி ஆயத்து வரவே நபிநாயகம் அவரிடம் ஸகாத்து வாங்க 2 பேரை அனுப்பி அந்த ஆயத்தையும் அவர் ஓதி க்கேட்கவே இதாகிறது. திரை எடுக்கிறதும் அதினுடப் பிறப்புமேயல்லாதில்லை. எங்கிலும் நீங்கள் போங்கள் நான் என் புத்தியை பார்த்துக்கொள்ளட்டுமென்று சொல் லவே 2 பேரும் வந்துவிட்டார்கள். பின்பு உமர்றலியல் லாகு அன்கு அவரிடம் போய் நீ கெட்டுப்போய்விட்டாய் உன் பேருக்கு குர்ஆனிறங்கியிருக்குதென்று சொல்லவே அவர் ஸகாத்துக்கொண்டு வந்தார் நபிநாயகம் உம்முடைய ஸகாத்தை கபூல் செய்கிறதை அல்லாகுத்த ஆலா என்னை விலக்கியிருக்கிறானென்று சொல்லிவிட்டார்கள். இப்படியே அபூபக்கர் உமர்றலியல்லாகு அன்குமாவுடைய காலத்தி

னும் சொல்லிவிட்டார்கள். உதுமான்றலியல்லாகு அன்கு டைய காலத்திலும அதை கபூல்ச்செய்யவில்லை அவர்கள் காலத்தில் அவர் மௌத்தாயிட்டார்.

றிவாயத்து வருகிறது உள்ளச்சத்துடன் தொழும் ஒரு மனிதனை மூஸா அலைஹிஸ்ஸலாம் கண்டு ஆண்டவனே இவனுடைய தொழுகை மெத்த அழகாயிருக்கிறதே என்றூர்கள். அப்போது அல்லாகுத்த ஆலா சொல்வான் இவன் தினம் 1000 றகஅத்து தொழுது 1000 அடிமை வாங்கி உருமையிட்டு 1000 ஜனூஸா தொழுது 1000 ஹஜ்ஜு செய்து 1000 தடவை பீஸபீல் வெட்டினூலும் அவனுடைய முதலுக்கு ஸகாத்துக்கொடுக்கமட்டிலும் அதுகள் அவனுக்கு புண்ணியம் கொடாதென்று சொல்லி விட்டான். றசூல் ஸல்லல்லாகு அலைகிவஸல்லம் திருவுள மானூர்கள்.

யாராகிலும் ஒருவனுக்கு அல்லாகுத்த ஆலா முதலை க்கொடுத்து அவன் அந்த முதலுக்கு ஸகாத்து கொடுக்க வில்லையானுல் அவனுக்கு கியாமத்தில் அதை தட்டைதலை பாம்புபோலாக்கப்பட்டு அவனுடைய கழுத்தில் சுத்திக் கொண்டு அவனுடைய 2 அலகிலும் கொட்டிக் கொட்டி நான்தான் உன்முதல் நான்தான், உன்புதயல் என்று சொல்லும். இன்னுமொரு றிவாயத்தில், அவனுடைய உச்சிதொடுத்து உள்ளங்கால்மட்டும் கொட்டுமென்று வருகிறது. இன்னும் ஸகாத்தில்லாருக்கு தொழு கையில்லையென்றும் திருவுளமானூர்கள். இன்னும் யாரா கிலுமொருவன் தன்னுடைய முதலுக்கு ஸந்தோஷமாக ஸகாத்து கொடுத்தால் முன் வானத்தில் அவன் பேரை சங்கைவானென்றும் 2ம் வானத்தில் ஈகையுடையவ னென்றும் 3ம் வானத்தில் வழிப்பட்டவனென்றும் 4ம் வானத்தில் நன்றியுடையவனென்றும் 5வதில் ஒப்புக்கொள்ளப்பட்டவனென்றும் 6வதில் முதல்களை காக்கப்பட்ட வனென்றும் 7வதில் பிழை பொருக்கப்பட்டவனென்றும்

சொல்லப்படும் யாராகிலும் ஒருவன் ஸகாத்துக்கொடுக்க வில்லையானால் முந்தின வானத்தில் அவனுடைய பெயரை பகீலென்றும் 2வதில் லுத்தனென்றும் 3வதில் நல்வழிக்கு சிலவழிக்காகவனென்றும் 4வதில் பேராசைபிடித்தவனென் றும் 5வதில் பாவியென்றும் 6வதில் பறக்கத்தை உரியப் பட்டவனென்றும் 7வதில் தட்டப்பட்டவனென்றும் சொல் லப்படுமென்று வந்துவிட்டது.

இன்னும் அல்லாகுத்த ஆலா பூமியை படைத்தபொ ழுது அது துளும்பி அசையத்தொடுத்தது. அப்போது மலைகளைப்படைத்து அதின்பேரில் வைத்தான். அதின் அசைவுதல் ஒடுங்கி தரிப்பட்டுவிட்டது. அப்பொழுது மலாயிகத்துகள் ஆச்சரியப்பட்டு எங்கள் நாயனே மலைகளை ச்காண கடுஷான படைப்பை நீ படைத்திருக்கிறாயாவெ ன்று கேட்டார்கள். ஆம் யிரும்பென்று சொன்னான். எங் கள் நாயனே யிரும்பைக்காண கடுஷான படப்பை நீ படை த்திருக்கிறாயாவென்று கேட்டார்கள். ஆம் நெருப்பென்று சொன்னான் எங்கள் நாயனே நெருப்பைக்காண கடுஷான படைப்பை நீ படைத்திருக்கிறாயாவென்று கேட்டார்கள். ஆம் தண்ணீரென்று சொன்னான். எங்கள் நாயனே தண் ணீரைக்காண கடுஷான படைப்பை நீ படைத்திருக்கிறாயா வென்று கேட்டார்கள். ஆம காத்தென்று சொன்னான். எங்கள் நாயனே காத்தைக்காண கடுஷான படைப்பை நீ படைத்திருக்கிறாயாவென்று கேட்டார்கள். ஆம் வலது கையால் ஸதகா கொடுத்து இடது கையை விட்டும் மறைக் கும்படியாகிய ஆதமுடைய மகனென்று அல்லாகுத்த ஆலா சொன்னானென்று றசூல் ஸல்லல்லாகு அலைகிவஸல்லம் திரு வுளம்பற்றினார்கள்.

இன்னும் ஸதகாவில் ரெம்பவருஷையானது முடுகு தலானவர்களுக்கு கொடுக்கிறது. அதைக்காண ரெம்ப வருஷையானது மனம் முரிவாயிருக்கிற குடல்வாய் ஜனத் துக்கு கொடுக்கிறதாயிருக்கும். சுவாத்தியத்தில் கெடுரக்

கிற ஸதகாவாகிறது. ரஷிலில் கொடுக்கிற ஸதகாவைக் காண ரெம்பவருஷையாயிருக்கும். தான் அதிக ஹாஜத்துள்ளவனுயிருக்க தன்னைக்காண மற்றவனை தெரிந்துக்கொள்வது ஸகாவத்தைக் காண வருஷையாயிருக்கும் ஸதகாவை ரகசியமாய் கொடுப்பான். இன்னும் ஸதகாவுடைய தவாபு 5 வகையாயிருக்கும். 1வது 1க்கு 10 தவாபு அதாவது சரீரம் சுவாத்தியமுள்ளவனுக்கு கொடுக்கிறது. 2வது 1க்கு 90 தவாபு அதாவது குருடனுக்கும் நோய் முஸீபத்துள்ளவனுக்கும் கொடுக்கிறது. 3வது 1க்கு 900 அதாவது சுத்தக்காரில் கையிலில்லாதவனுக்கு கொடுக்கிறது. 4வது 1க்கு 100000 அதாவது தாய் தகப்பனுக்கு கொடுக்கிறது, 5வது 1க்கு 900000 அதாவது ஆலிம்பகீருக்கு கொடுக்கிறது.

அபூபக்கர் ஸித்தீக்றலியல்லாகு அன்கு அவர்கள் 40000 தங்கக்காசை இரவில் 10000-மும் பகலில் 10000 மும் ரகஸியத்தில் 10000 மும் பறுஷியத்தில் 10000 மும் சதகா கொடுத்தார்கள், உமறுமான்றலியல்லாகு அன்கு அவர்கள் தபூக்கு சண்டைக்கு 1000 ஒட்டகமும் 1000 தீனரும் கொடுத்தார்கள். அப்பொழுது நபிநாயகம் அவர்கட்கு த்துஆ செய்தார்கள். அப்துற்றஹ்மானிப்னு ஔபுறலியல்லாகு அன்கு அவர்கள் 8000 தீனரில் 4000 ஸதகா கொடுத்துவிட்டு பாக்கி 4000 எனக்கும் பிள்ளை குட்டிகளுக்கும் வைத்துக்கொண்டேனென்றூர்கள். அப்பொழுது நபிநாயகம் நீர்கொடுத்ததிலும் வைத்துக்கொண்டதிலும் அல்லாகுத்த ஆலா பறகத்து செய்வானென்று சொன்னூர்கள். இன்னும் உங்களுடைய சதகாக்களை சொல்லிக்காட்டுவது கொண்டும் நோவினையைக்கொண்டும் கெடுத்துப்போடாதீர்கள் என்று அல்லாகுத்த ஆலா திருவுளமானுன் அறிந்துக்கொள் சொல்லிக்காட்டுவதாகிறது. நான் உனக்கு எம்மாத்திரமோ தந்திருக்கிறேன். எம்மாத்திரமோ உபகாரம் செய்திருக்கிறேன் என்று சொல்லுகிறது நோவினை செய்வதாகிறது. நான் உனக்கு எவ்வளவ

வோ தந்திருக்கிறேன். அது உன் மனதிலில்லையே என்று சொல்லுகிறது அல்லது எத்தனை தடவை வருகிறாய் அல்லது உனக்கு வெட்கமில்லையா என்று சொல்வது நோவினை செய்வதென்று சொல்லப்படும்.

நபிஸல்லல்லாகு அலைகிவஸல்லம் திருவுளமானார்கள். அல்லாகுத்த ஆலா மூசா அலைகிஸ்ஸலாமவில் வஹீ அறிவித்தான் மூஸாவே நீர் எனக்காக என்ன செய்தாயென்று கேட்டான். அப்பொழுதவர்கள் நானுனக்காக தொழுதேன் நோன்புவைத்தேன் தஸ்பீஹு செய்தேனென்றார்கள். அப்பொழுது அல்லாகுத்த ஆலா திருவிழமானான். மூசாவே தொழுகையாகிறது பாலத்தைக் கடத்தாட்டுவதாகவும் நோன்யாகிறது. நரகத்தைவிட்டும் கார்மானமாகவும் தஸ்பீஹாகிறது. சுவர்க்கத்தில் தறஜாவாகவுமிருக்கும் மூசாவே வேறு சாலிஹான அமல் யேதுஞ் செய்திருக்கிறாயாவென்று கேட்டான். அப்பொழுதவர்கள் கடுஷான அழுகையாயழுது என்னுடைய நாயனே எனக்கு சாலிஹான அமலை அறிவித்துதாவென்றார்கள். அப்பொழுது மூசாவே நீர் பசித்தவருக்கு பசியாத்திவைத்தாயா தாகித்தவர்களின் தாகந்தீர்த்தாயா, உடையில்லாதவர்கட்கு உடையுடுத்தாட்டினாயா, அணியாபத்திலகப்பட்டவர்கட்கு உதவி செய்தாயா, அறிவாளர்கட்கு சங்கை செய்தாயா இதுகளாகிறது சாலிஹான அமலாயிருக்குமென்று அல்லாகுத்த ஆலா திருவுளமானான்.

ஆனால் திருட்டு, வம்பறியல், கையிடை, ஆயம், அனீதம், வட்டிபோல்கொத்த ஹறாமான முதலைக்கொண்டு ஸதகாகுடான் றசூல் ஸல்லல்லாகு அலைகிவஸல்லம் திருவுளமானார்கள். நான் மிஹ்றாஜுடைய இரவில் சில மனிதரைக்கண்டேன். அவர்களில் ஒவ்வொருவனுடைய வயறும் ஒரு பெரிய வீடுபோலிருக்கிறது. அவர்களை நடக்கவிடாமல் வயறு ஒரு பக்கம் தள்ளுகிறது. பிர் ஒளனுடைய கூட்டத்தார் காலை நேரம் மாலை நேரம் நரகத்துக்குபோகும் வழியில் கிடக்கிறார்கள். அவனுடைய கூட்டமபைத்

றியம் பிடித்த பெரும் ஒட்டகங்களைப்போல் வருகிறார்கள். அப்பொழுது வட்டி தின்ற ஜனங்களுக்கு முடுகினால் பயந்து எழும்ப பார்க்கிறார்கள். வயறு அவர்களை சாய்த்துவிடுகிறது. அதில் கிடந்து மிதிபடுகிறார்கள்.

அப்பொழுது நான் ஜிப்ரீலிடம் இவர்கள் யாரென்று கேட்டதற்கு இவர்கள் வட்டி தின்றவர்களென்று சொன்னார்கள். இன்னுமொரு றிவாயத்தில் அவர்களுடைய வயத்தில் பாம்புகள் கிடக்கிறதென்றும் அவைகள் வெளியே திரிகிறதென்றும் வருகிறது. இன்னும் வட்டி தின்றவனையும், வட்டி கொடுத்தவனையும், சீட்டெழுதினவனையும் சாட்சி போட்டவனையும் நபிஸல்லல்லாகு அலைகிவஸல்லம் லஃனத்துச் செய்து இவர்களடங்கலும் பாவத்தில் சரியானவர்களென்றார்கள்.

இன்னும் வட்டியாகிறது பறக்கத்தை போக்கிவிடுமென்றும் பாவங்களை அதனமாக்குமென்றும் ஷை பொருளைக்கொண்டு நோன்பு திறந்தால் அந்த நோன்பு கபூலாகாதென்றும் இன்னும் யாருடைய வயற்றில் ஷை பொருளுடைய வஜீபனம் உண்டாயிருக்குமோ அவர்களுடைய தொழுகை கபூலாகாதென்றும் ஷை பொருளை சதகா கொடுத்தால் அந்த சதகா கபூலாகாதென்றும் இன்னும் வட்டி வாங்குகிறவர்களின் பேரில் அல்லாகுத்த ஆலா எப்பொழுதும் லஹனத்துச் செய்கிறானென்றும் கியாமத்து நாளில் அவர்களுடன் சண்டை செய்வானென்றும் றஹ்மத்துடைய பார்வை பார்க்கமாட்டானென்றும் சொல்லப்பட்டிருக்கிறது இன்னும் தொழுகையாகிறது சுப்ஹு தொழுகை ஆதம் அலைகிஸ்ஸலாம் தொழுதார்கள். லுகரு இப்றுஹீம அலைகிஸ்ஸலாம் தொழுதார்கள் அல்லது சுலைமான் அலைகிஸ்ஸலாம் தொழுதார்கள்.

மஃறிபு ஈசா அலைகிஸ்ஸலாம் தொழுதார்கள். இஷா மூசா அலைகிஸ்ஸலாம் தொழுதார்கள். இன்னும் தொழுகையிலுள்ள ஒரு சிறிய ஹிக்மத்தை சொல்லுகிறேன்.

அதாவது மனிதர் மேனியிலுள்ள நிஃமத்தில் பாரதூரமானது அப்யரிவாயிருக்கும். அதில் முகந்தரியுதலென்னும் நிஃமத்தால் வாசமும் நாற்றமும் இவ்விரண்டையு மெத்திக்கொள்வதற்கு ஷுகுருக சுப்ஹூ 2 றக் அத்தாகவும் ஷுவை யெங்கிரநிஃமத்தால் இனிப்பு புளிப்பு கசப்பு துவர்ப்பு இந்த நாலையும் எத்திக்கொள்வதால் லுகற் 4 றக அத்தாகவும் தொட்டறியுதலால் வல்லினம் மெல்லினம் உஷ்ணம் சீதம் ஆக இந்நாங்கையும் யெத்திக்கொள்வதால் அஸறு 4 றக அத்தாகவும் பார்வையால் வலதாலே இடதாலே முன்னாலே ஆக இம்மூன்றையும் யெத்திக்கொள்வதால் மஃரிபு 3 றக அத்தாகவும் கேள்வியால் முன்னாலே பின்னாலே வலதாலே இடதாலே உள்ளதை எத்திக்கொள்வதால் யிஷா 4 றக அத்தாகவும் இவ்விதம் அல்லாகுத்தஆலா தன்னடியார்பேரில் உள்கிருபையால் ஷுகுறை தேடுகிறான்.

இன்னும் சொல்லால் சியலால் நினைவால் இம்மூன்று விதமான வணக்கத்தை பொதிந்ததாயும் இஸ்லாமை குப்ரைவிட்டும் பிரிக்கிறதாயும் மூமின்கட்கு மிஃறாஜாகவும் அல்லாவை பொருத்தமாக்கி வைக்கிறதாயும் விற்சாதிகளின் வணக்கமான நிலையையும் மிருகங்களின் வணக்கமான றுகூஅயும் மலைகளின் வணக்கமான இருப்பையும் மலக்குகளின் வணக்கமான ஸுஜூதும் ஊர்வின பறவின புளுபொட்டைகளின் வணக்கமான தஸ்பீஹு தக்பீரு தஹ்லீலு தஹ்மீதை பொதிந்ததாயுமிருக்கும்.

இத்தகை அகமியங்கள் பொதிந்தது தொழுகையேயல்லாது வேறில்லை. இன்னும் மனமுறண்டாக தொழுகை விட்டவர்களை 80 ஹுக்பா நரகத்தில் போடப்படுமென்றும் ஹுக்பாவென்பது 80 வருஷமென்றும் நாயகம் ஸல்லல்லாகு அலைகிவஸல்லம் திருவுளமானார்கள். இன்னும் சுப்று தொழாததற்காக அதில் நின்றும லுகற்வரைக்கும் லுகற் தொழாததற்காக லுகறில் நின்றும் அஸற் வரைக்குரம்

அஸர் தொழாததற்காக அஸறில் நின்றும் மஃரிப் வரைக்கும் மஃரிப் தொழாததற்காக மஃரிபில் நின்றும் இஷா வரைக்கும் இஷா தொழாததற்காக இஷாவில் நின்றும் சுப்ஹூ வரைக்கும் கப்ரில் அடிக்கப்படுமென்றும் மலக்குகள் சுப்ஹூ தொழுகை விட்டவனை கெட்டவனே என்றும் ளுகர் தொழுகை விட்டவனை நஷ்டவாளனே என்றும் அஸ்ரு தொழுகைவிட்டவனை பாவியே என்றும் மஃரிபு தொழுகைவிட்டவனை காபிரே என்றும் இஷா தொழுகை விட்டவனை தொழுகைகளை பழுதாக்கினவனே அல்லாகுதஆலா உம்மை பழுதாக்குவானாகவு மென்றும் சொல்வார்களென்று வந்தவிட்டது,

கஷ்புல் அஹ்பார்றலி யல்லாத்து அன்கு சொன்னார்கள். திட்டமாக இப்லீஸா குறவன் 40000 வருஷம் சுவர்க்கத்துக்கதிபதிபாகவும் 80000 வருஷம் மலக்குகளுடனும் 20000 வருஷம் மலக்குகளுக்கு வஹழு சொல்லுகிறவனாகவும் 30000 வருஷம் கர்ரூபீனென்னும் மலக்குகட்கு நாயகமாகவும் 1000 வருஷம் றூஹானிகட்கு நாயகமாகவும் 14000 வருஷம் அர்ஷை சுத்தி தவாபு செய்தவனாகவுமிருந்தானென்றும் இன்னும் முன் வானத்தில் அவனுடைய பெயர் ஆபிதென்றும் 2ம் வானத்தில் ஸாஹிதென்றும் 3ம் மானத்தில் ஆரிபென்றும் 4ம் வானத்தில் ஒலியென்றும் 5ம் வானத்தில் தகீயென்றும் 6ம் வானத்தில் காரிபென்றும் 7ம் வானத்தில் அஸாஸீலென்றும் லௌஹில் மஹ்பூலில் இப்லீஸென்றும் உண்டாயிருந்ததென்று இப்படிக்கிருக்க அல்லாகுத்தஆலா ஆதம் அலைகிஸ்ஸலாமுக்கு ஸஜூது செய்யச்சொன்னபொழுது அந்த ஒரு ஸஜூதை தட்டின நிமித்தம் அவனை லஃனத்துச் செய்யப்பட்டிருக்க காலமெல்லாம் அல்லாவுடைய யேவலாகிய தொழுகையை விட்டுவிட்டால் அவர்களுடைய ஹால்கள் என்னவிதமாகுமென்றும் மேல் கூறிய அதாபுகளுககு என் பாத்திபமுடையவர்களாகமாட்டார்களென்றும் புத்திசாலிகளுக்கு யோசித்துப்பார்த்தால் நன்றாய் தெரியவரும்.

இனி வானங்களில் முன்வானத்தின் பெயர் வகீஃ யென்றும் 2வதின் பெயர் அர்பலூன் யென்றும் 3வதின் பெயர் கைதூம் யென்றும் 4வதின் பெயர் மாஊன் யென்றும் 5வதின் பெயர் தப்காஉன் யென்றும் 6வதின் பெயர் வப்ஞவுயென்றும் 7வதின் பெயர் அறுபாவுமென்றும் வந்திருக்கிறது. இன்னும் முன் வானமாகிறது தடுக்கப்பட்ட அலையினுலிருக்கிறதென்றும் அதில் புறை யிருக்கிறதென்றும் 2ம் வானம் வெண்மையான முத்தினுலிருக்கிறதென்றும் அதில் அதாரிதெனும் நக்ஷத்திரம் இருக்கிறதென்றும் 3ம் வானம் இரும்பினுலிருக்கிறதென்றும் அதில் ஸுஹ்றுவென்னும் நக்ஷத்திரம் இருக்கிறதென்றும் 4ம் வானம் வெங்கலத்தால் இருக்கிறதென்றும் அதில் பொழுதிருக்கிறதென்றும் 5ம் வானம் செம்பினுலிருக்கிறதென்றும் அதில் மிர்ரீகெனும் நக்ஷத்திரமிருக்கிறதென்றும் 6ம் வானம் வெள்ளியினுலிருக்கிறதென்றும் அதில் முஷ்திரியென்னும் நக்ஷத்திரமிருக்கிறதென்றும் 7 வானம் தங்கத்தினுலிருக்கிறதென்றும் அதில் ஸுஹல் என்னும் நக்ஷத்திரமிருக்கிறதென்றும் 7ம் வானத்திற்குமேல் 8ம் வானமிருக்கிறதென்றும் அதற்குத்தான் குர்ஸியென்று பெயர். அதற்குமேல் 9வது வானமிருக்கிறதென்றும் அதுதான் றஹுமானுடைய அர்ஷா யிருக்குமென்றும் ஒவ்வொரு வானத்துக்கிடையில் 500 வருஷத்து அடிப்பாடுண்டென்றும் வந்துவிட்டது. இன்னும் நமது நாயகம் ஸல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்கள் மிஃறுஜனுடைய இரவில் முந்தின வானத்தில் ஆதம் அலைகிஸ்ஸலாமையும் 2-ம் வானத்தில் யஹ்யா-யீஸா அலைகிமஸ்ஸலாமையும் 3ம்வானத்தில் யூசுபு தாவூது அலைகிமஸ்ஸலாமையும் 4வது வானத்தில் இத்ரீஸ் அலைகிஸ்ஸலாமையும் 5வது வானத்தில் ஹாறூன் அலைகிஸ்ஸலாமையும் 6வது வானத்தில் மூஸா அலைகிஸ்ஸலாமையும் 7வது வானத்தில் இப்றுஹீம் அலைகிஸ்ஸலாமையும் கண்டார்கள். ரிவாயத்து வருகிறது மூசா அலைகிஸ்ஸலாம் நாயனை பார்க்கவேணுமென்று சொல்லவே அவர்களிருந்த மலையைச்சுத்தி நாக்காத வெளி

க்கு மேகத்தையும் இடியையும் மின்னலையும் இருளையும் அனுப்பப்பட்டது. இன்னும் மூசா அலைகிஸ்ஸலாமுக்கு மலக்குகளை வெளியாகும்படி நாயன் சொன்னான். முன் வானத்து மலக்குகள் காளைமாட்டுடைய ரூபத்தில் இடிமுழங்குமாப்போல் தஸ்பீஹைக்கொண்டு சத்தத்தை உயர்த்தினவர்களாக வந்தார்கள். பின்பு நாயன் 2ம் வானத்து மலக்குகளை யேவினான். அவர்கள் தஸ்பீஹைக்கொண்டும் தக்பீரைக் கொண்டும் சத்தத்தை உயர்த்தினவர்களாய் புலியுடைய ரூபத்தில் வந்தார்கள். அவர்களைக் காணவே மூசா அலைகிஸ்ஸலாமுடைய சரீரமெல்லாம் புல்லரித்து நடுங்கி நாயனைப் பார்க்கவேணுமென்று கேட்டதைக்குறித்து கவலையடைந்து நானிருக்கும் தலத்தைவிட்டும் என்னைக்காப்பாத்தும் வஸ்துண்டாவென்றார்கள். அப்போது ஜிப்ரீல் அலைகிஸ்ஸலாம் மூசா அலைகிஸ்ஸலாமுடனே இருந்தார்கள். அவர்கள் சொன்னார்கள், ஒ மூசா அலைகிஸ்ஸலாமே நீர் கண்டது கொஞ்சம் காணாதது மெத்த இருக்கிறது பொருமென்றார்கள்.

பின்பு நாயன் 3வது வானத்துமலக்குகளை யேவினான் அவர்கள் கழுவுடைய ரூபத்தில் அக்கினி சுவாலையுடைய நிறத்தில பெருங்கூட்டமாய் அவர்களுடைய வாய்களில் தஸ்பீஹு சத்தம் முழங்கினவர்களாய் வந்தார்கள். அவர்களை மூசா அலைகிஸ்ஸலாம் காணவே திடுக்கமிட்டு நடுங்கி நாம பிழைக்கமாட்டோமென்றெண்ணிவிட்டார்கள். ஜிப்ரீல் அலைகிஸ்ஸலாம் சொன்னார்கள், இம்ரானுடைய மகனாரே பதருதயும் பொறுக்கமுடியாதே அதைக்காணவேண்டியது பின்னுக்கிருக்கிறதென்றார்கள். பின்பு நாயன் 4ம் வானத்து மலக்குகளை அனுப்பினான். அவர்கள்திரேகமெல்லாம் வெண்மையான பனிககட்டியாலும் நிறம் அக்கினி சுவாலைபோலும் அவர்கள் தஸ்பீஹு தக்பீசைக்கொண்டு சத்தத்தை உயர்த்தினவர்களாயும் முன்வந்த மலைக் குகைகளைக்காணமெத்த அமளியையுடையவர்களாயும்வந்தார்கள். அவர்கள் வரவே மூசா அலைகிஸ்ஸலாமுடைய இரண்டுமுட்டும்

தென்னிவிட்டது. கல்பு அப்படியே பதறி நடுங்கி அவய மிட்டழுதார்கள்.

ஜிப்ரீல் அலைகிஸ்ஸலாம் சொன்னார்கள். இம்ரானுடைய மகனே பொருதி செய்யும். கண்டது கொஞ்சம் காணாதது மெத்த இருக்கிறதென்றார்கள்.

பின்பு நாயன் 5-ம் வானத்து மலக்குகளை ஏவினான். அவர்கள் எழு நிறமுடையவர்களாய் இரங்கினார்கள். அவர்களைப்பார்க்க மூசா அலைகிஸ்ஸலாமுடைய பார்வை தரிக்கவில்லை. அவர்களைப்போல் அவர்கள் பார்க்கவுமில்லை. அவர்களுடைய சப்தத்தைப் போல் சத்தம்கேட்கவுமில்லை. அவர்களைக் காணவே மூசா அலைகிஸ்ஸலாமுடைய கல்பெல்லாம் பயங்கரத்தால் நிரம்பிவிட்டது, வியாரம் கடுஷாயிட்டது. அழுகை அதிகப்பட்டது. அவர்களைப்பார்த்து ஜிப்ரீல் அலைகிஸ்ஸலாம் சொன்னார்கள், இம்ரானுடைய மகனாரே பதறாதயும் இன்னும் சிலதைப் பார்க்கவேண்டியிருக்கிறதென்றார்கள்.

பின்பு நாயன் 6-ம் வானத்து மலக்குகளை ஏவினான் அவர்கள் இறங்கினார்கள். ஒவ்வொருவர் கையில் பொழுதுடைய சுடரைக் காண அதிகமான சுடறாய் நீண்ட மித்தமாத்தைப்போல நெருப்புப்பந்தம் பிடித்தவர்களாயும் நெருப்பு உடை உடுத்தினவர்களாயும் சுப்பூஹுன் குத்துஸுன் றப்புல் இஸ்ஸதி அபதன்லாயமூத்து என்ற சப்தத்தை உயர்த்தினவர்களாயும் ஒவ்வொருவருடைய தலை அடங்கலிலும் நாலுமுகமுள்ளவராயும் வந்தார்கள். மூசா அலைகிஸ்ஸலாம் இந்த மலக்குகளைக் காணவே அழுது அழுகையோடழுகையாய் அவர்களுடனே இவர்களும் தஸ்பீஹு செய்யத்தார் அதுடனே ஆண்டவனே உன்னுடைய அடிமையை நினைத்துப் பார் மறந்திடாதே என்றார்கள்.

ஜிப்ரீல் அலைகிஸ்ஸலாம் சொன்னார்கள். இம்ரானுடைய மகனே நீர் கேட்ட கேள்விக்கு சப்ரு செய்யும் பதறாதயும் என்றார்கள்.

பின்பு நாயன் 7-ம் வானத்து மலக்குகளை மூசா அலை ஹிஸ்ஸலாமுக்கு அற்ஷை ஏழாம் வானத்தில் கொண்டுவந்து காட்டச்சொன்னான். அற்ஷுடைய நூறுவெளியாகவே மலை அப்படியே மூச்சுவிட்டு புண்டுபோச்சுது. மலக்குகளெல்லாம் சுப்ஹானல்லாகில் குத்தூஸிறப்புல் இஸ்ஸத்தி அபதன்லாபமூத்து என்ற சத்தத்தை உயர்த்தினார்கள். அப்பொழுது மலையும் அதிலிருந்த மரமட்டைகளும் அப்படியே தவிடுபொடியாகிவிட்டது. மூசா அலைகிஸ்ஸலாம் முகத்தோடடித்து யாதொரு உயிர் உணர்ச்சியில்லாமல் அடித்து விழுந்தார்கள். அவர்கள் நின்ற கல்லை அல்லாகுத்த ஆலா ஒரு குப்பாவைப்போல் பிரட்டி அவர்களை அதில் ஆக்கிரதில்லாதிருக்கில் கரிந்து போவார்கள்.

இனி பூமி ஏழா இருக்கும். ஒவ்வொரு பூமியிலும் ஒவ்வொருவிதமான படைப்பு இருக்கிறது. பூமியில் மிகுந்தது காடாகவும் மலையாகவும் கடலாகவுமிருக்கிறது. இன்னும் பூமியில் முக்கால்வாசி தென்பக்கம் கடலாயிருக்கிறதென்றும் அதற்கப்பால் பூமியேயில்லையென்றும் இந்த பூமியில் மனிதர் வாசஞ் செய்யுமிடங்களெல்லாம் 24 வருஷதூரந்தானிருக்கிறதென்றும் மத்ததெல்லாம் காடும் மலையுமென்று வருகிறது இன்னும் துன்யாவை சுத்தி இருளும் அந்த இருளுக்கப்பால் காபுமலையுமிருக்கிறது. காபுமலை பச்சை மரகதத்தாலுண்டாயிருக்கிறது. வானத்துடைய அருகு காபுமலையோடு பிடித்தாப்போலிருக்கிறது.

பூமி அடங்கலுக்கும் நடுத்தலம் குப்பத்துல்அற்லெனும் தலமாயிருக்கும். அந்தத்தலத்தில் எக்காலமும் சூடும் குளிர்ச்சியும் இரவும் பகலும் ஒன்றேயொன்று கூடாமலும் குறையாமலும் சரியாயிருக்கும். கஹ்பத்துல்லாவாகிறது. மனிதர் வாசம் செய்யும் பூமிக்கு நடுத்தலமாயிருக்கும் இனி அறிந்துகொள் பூமிமுகத்திலிருக்கும் மலைக்கெல்லாம் முந்திஉண்டானமலைமக்கத்திலிருக்கும் அபூகுபைஸ மலையாயிருக்கும் பூமியில் ஒரு மலையாவது அதனுடைய வேர் காபு மலையில் போய் பிடித்தே ஒழியவில்லை.

அல்லாகுத்த ஆலா பூமி தளும்ப நாடினால் காபுமலைக்கு வஹீ அறிவிப்பான். காபுமலையில் நின்றும் அந்தவேர் அசையும். அசையவே பூமி தளும்பிவிடும் குட்டிமலைகளைத்தவிர துன்யாவில் 6673 மலைகளிருக்கிறது. பூமியில் பெரிய ஆறுகளாய் ஓடுகிறதில் 1வது கூபாவிலிருக்கும் புருத்து 2வது பஹ்தாதிலிருக்கும் திஜ்லா 3வது மவ்வாலிய்யாவிலிருக்கும் ஸைஹான் 4வது ஹிந்து ராஜியத்திலிருக்கும் ஸைஹூன் 5வது அர்மன் தேசத்திலிருக்கும் ஜைஜான் 6வது பலஹ் ராஜ்யத்திலிருக்கும் ஜைஜூன் 7வது மிஸ்றிலிருக்கும். நீலாறு இன்னும் பெரும் ஆறுகளிருக்கிறது. அதை சொல்லப்படவில்லை. வஹபுப்னு முனப்பிஹ் றலியல்லாகு அன்கு அவர்கள் சொன்னார்கள்.

அல்லாகுத்த ஆலா இப்லீசை நபிநாயகத்திடம் போகச்சொல்லி அவர் கேட்கிறதற்கெல்லாம் ஜவாபு சொல்லச் சொன்னான். இப்லீசு ஒரு கிழவனுடைய ரூபத்தில் கோலூன்றிக்கொண்டு நபிநாயகத்திடம் வந்தான். நபிநாயகம் அவனைப்பார்த்து நீரு ரென்று கேட்டார்கள். நான் இப்லீசென்று சொன்னான். நீ ஏன் என்னிடம் வந்தாயென்று கேட்டார்கள். அதற்கவன் என்னுடைய நாயன் என்னை உம்மிடம் வரும்படிக்கும் நீர் கேட்கிறதற்கெல்லாம் ஜவாபு சொல்லி அறிவிக்கும்படிக்கும் சொன்னானென்றான் அப்பொழுது நபிநாயகம் அவனிடத்தில் என்னுடைய உமமத்துமாரில் நின்றும் எத்தனைபேர் உனக்கு பகையென்றுகேட்டார்கள்.

அதற்கவன் 15 பேரென்றான். 1வது நீர் 2வது நீதம் செய்யும் ராஜன் 3வது உண்மையுடைய கச்சவடக்காரன் 4வது தாட்சிணைசெய்யும் சீமான் 5வது உள்ளச்சமுடைய ஆலிம் 6வது நஸீஹத்து சொல்லும் மூமின் 7வது இறக்கமுடைய மூமின் 8வது எப்போதும் பாவத்தை விட்டும் தௌபாசெய்கிறவன் 9வது ஹறாமை விட்டும் பேணுதலானவன் 10வது எப்போதும் வுலுவுடனே இருப்பவன் 11வது மிகுந்த ஸதகா கொடுக்கும் மூமின் 12 மனிதருட

ணே நற்குணமாயிருப்பவன். 13வது மனிதருக்கு பிரயோஜனமானவன் 14வது குர்ஆனை பாடமாக்கி எப்போதும் ஓதுகிறதில் தாயிமாயிருப்பவன் 15வது மனிதர் நித்திரை கொள்ள இரவில் நின்று வணங்கிறவனென்று சொன்னான். பின்பு நபிநாயகம் அவனிடத்தில் என் உம்மத்துமாரில் நின்றும் உனக்கு கூட்டாளிமார் எத்தனைபேர் உண்டென்று கேட்டார்கள்.

அதற்கவன் சொன்னான் 10 பேரென்றான். 1வது அனியாயக்கார சுல்தான் 2வது பெருமைபடிக்கும் சீமான் 3வது சதிமானக்கார கச்சவடக்காரன் 4வது கள்குடியன் 5வது வாலிபக்கார பெண்கள் 6வது மூகத்தாட்சிணைக்காரன் 7வது யதீமுடைய சொத்தை ஆசிப்பவன் 8வது வட்டி முதல் தின்பவன் 9வது ஸகாத்தை விலக்குகிறவன் 10வது மேலெண்ணத்தை நீட்டுகிறவன். ஆக இவ்வளவு பேர்களும் என்னுடைய அஸ்ஹாபிகளும் உடப்பிறந்தாருமாயிருக்குமென்று சொன்னான் றசூல்ஸல்லல்லாகு அலைகிவஸல்லம் திருவுளமானார்கள்.

5 கருமம் 5 கருமத்தினாலுண்டாகும் 1வது அறிதிமானத்தை முறித்தால் முறித்தவர்கள் பேரில் பகைபகை சாட்டப்படும் 2வது வேதத்தைக்கொண்டு நியாயம் தீர்க்கவில்லையானால் மிடிமை அதிகப்படும். 3வது வினை அதிகப்பட்டால் வபாவும் மௌத்தும் அதிக்கப்படும். 4வது பொட்டை அளவு அளந்தால் பஞ்சம் பிடிக்கும். 5வது ஸகாத்தை தடுத்தால் மழையை தடுக்கப்படுமென்று றிவாயத்து வருகிறது தத்திரப்படுவது ஸைத்தானில் நின்றுமாயிருக்கும் 6 கருமத்திலொழுய அதில் 1வது வக்தான உடனே தொழுகிறது. 2வது மையத்து வந்தவுடனே அடக்குகிறது. 3வது கன்னி ஸ்திரி பாலிஹான உடனே கலியாணம் முடித்துக்கொடுக்கிறது. 4வது தவணை தீர்ந்த உடனே கடனைக்கொடுக்கிறது. 5வது விருந்தாளி வந்தவுடனே விருந்து கொடுக்கிறது, 6வது பாவம் செய்தால் உடனே தௌபா செய்கிறது.

றசூல்ஸல்லல்லாகு அலைகிவஸல்லம் திருவுளமானார்கள்.

1 மனிதனுக்கு 20 மலக்கு முன்னும் பின்னும் ஒரு மலக்கு முன்னெற்றியிலும் 2 மலக்கு 2 உதட்டிலும் ஒருமலக்கு வாயிலும் 2 மலக்கு 2 கண்ணிலும் இருக்கிறார். இரவு பகல் 20 மலக்கை 1 இன்ஸானுக்கு சாட்டப்பட்டிருக்கிறது. வலதிலும் இடதிலும் இருக்கிறவர் நன்மை தின்மை எழுதுகிறவர் முன்னும் பின்னும் இருக்கிறவர் ஜின்னு முதலானதை விட்டும் காக்கிறவர் முன்னெற்றியில் நிற்கிறவர் அவன் தாழ்மையாய் செய்தால் அவனை உயர்த்துவார், பெருமை யடித்தால் தாழ்த்துவார். 2 உதட்டிலிருக்கிறவர் நபிநாயகத்தின்பேரில் அவன் சொல்லும் சலவாத்தை எழுதிவருவார் வாயிலிருக்கிறவர் பாம்பு வாயில் புகுதாமல் காத்துக்கொண்டிருக்கிறார். அவன் மௌத்தானால் நன்மை தின்மை எழுதும் மலக்கு நாயனிடத்தில் நாங்கள் என்ன செய்யவென்று கேட்பார்கள். 2 பேரையும் அவனுடைய கப்ரளவில் போய் தஸ்பீஹு செய்துகொண்டிருந்து அந்த தவாபை அவனுக்கு எழுதும்படி நாயன் சொல்வான் கியாமமட்டில் அவர்கள் அவனுடைய கப்ரிலிருந்து அப்படியே செய்துகொண்டிருப்பார்கள்.

நாயகம் ஸல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்களுடன் தபூக்கு சண்டைக்கு போகாத்ததால் தள்ளி வைத்தவர்கள் 3- பேர்கள். அவர்கள் யாரென்றால் 1 கஅபுப்னுமாலிக் 2- வது மிறாறத்திப்னு றபீஃ 3- வது ஹிலாலப்னுஉமையா. அந்த 3 பேருடனும் பழக்கம் பேசாமல், மனிதரை விலக்கிவிட்டார்கள். அவர்களுடனே இனத்தார் ஜனத்தார் ஒருவரும் பேசவில்லை. அதில் 2 பேர் அழுதவர்களாக வீட்டில் இருந்துவிட்டார்கள். கஅபு மாத்திரம் தொழுகிற இடத்திற்கு வருவதும் கடைவீதியில் சுத்துவதுமாயிருந்தார்கள். அப்பால் 40 நாளைக்குப் பிறகு நபிநாயகத்திடமிருந்து ஒருவர் வந்து ஆண்டவர்கள் உம்மை உம்முடைய பெண்சாதியை விட்டும் நீங்கிக்கொள்ளவேண்டுமென்று சொன்னார்களென்று சொன்னார்.

அப்பொழுது நான் கேட்டேன். அவளை தலாக்கு சொல்லவா, அல்லது வேறென்னவென்று அவரிடம் கேட்க அவர் அவள்கிட்ட மூடுக வேண்டாமென்றூர். இப்படிக்கு என்னுடன் சேர்ந்த இருவருக்கும் உத்திரவு செய்தார்களென்று கஅபு சொன்னூர்.

பின்பு 50 இறவு நிறப்பமான பின் அவர்களுடைய தௌபாவை கபூல் செய்யப்பட்டது, நபிநாயகம் ஸல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்களை கோவினை செய்தவர்கள் ஐவர்கள். இந்த 5 பேர்களும் பத்ரு சண்டைக்குமுன் ஹலாக்காப் போனூர்கள்.

1வது வலீது ஒருநாள் ஒருமனிதன் அம்புவேலை செய்யும்போது அவர்கிட்டே அவன் போனுன் அவன் பிடறியில் அம்பு கொளிக்கிக்கொண்டது. அவன் திரும்பி அதையெடுத்தெரிய வெட்கப்பட்டு பெரியதனத்தோடு நடக்கும்போதே அவனுடைய பிடவை தோளில்போட பிடவையை உயர்த்தினுன். கொளிகியிருந்த அம்பு அவனுடைய பெரிய தலத்தில் பிடித்து அது தரித்து செத்தம் மருக்காமல் அப்படியே செத்தான்.

2வது ஆஸிபிப்னுவாயில் அவன் நபிநாயகத்துக்கு புரமைவாயையும் மூக்கையும் சுளித்துக்காட்டி பரியாசமபண்ணுகிறவனுயிருந்தான். அவன் தன்னுடைய 2 மகனுடனே வாகனத்திமேலறிக்கொண்டு போனதில் ஒருவிடத்தில் இறங்கி பூமியில் கால்வைக்கவே கொட்டிவிட்டதென்றுன். நின்றவர்களெல்லாம் தேடினூர்கள். ஒன்றையும்காணவில்லை அப்பவே கால் வீங்கி செத்தான்.

3வது ஹாரிதிப்னுகைஸ் அவன் உப்புவைத்த மீன் தின்றுன். தாகம் அதிகப்பட்டு தண்ணீரைக் குடித்துக்குடித்து வயர்தெரித்து அப்பாலே செத்தான்.

4வது அஸ்வதிப்னு முத்தலிப். அவன் தன்னுடைய பயலோடு புறப்பட்டுப் போய் ஒரு மரத்துத்தூரில் சாய்ந்து கொண்டிருந்தான். ஜிப்ரீல் அலைகிஸ்ஸலாம போய் அவனுடைய தலையைப் பிடித்து மரத்தில் அறைந்திட்டார்கள்.

அவன் அந்த பயலைப் பார்த்து என்ன பார்த்துக் கொண்டிரு க்கிருயே தெரியவில்லையாவென்ருன். அதற்கவன் சொல் வான். பார்க்கிறேனே உம்மை யார் என்ன செய்கிருர் தெரியவில்லையே நீர்தானே தன்னலே முட்டிக்கொண்டீரெ ன்ருன். உடனே அவன் அவ்விடத்திலேயே செத்தான்.

5-வது அஸ்வதிப்னு அட்துயலூது. அவன் அஸ்ஹாபி மார்களைக்கண்டால் தன்னுடைய கூட்டாளிமாரைப்பார்த்து கிஸ்றவையும் கைஸரையும் பாரத்து அனந்திரம் கொண்டு பூமியைக் கட்டியாளும் ருஜாக்கள் வருகிருர்களென்று சொல் வான். அவன் ஒருநாள் வீட்டிலிருந்து வெளியில் போனன் அவனுக்கு நஞ்சு காற்றுபிடித்து அவனுடைய திரேகம் சுரி குளித்துப்போய் வீட்டிற்கு போனன். அவன் நிறம் மாறி போனபடியால் இவனெவனே ஒரு பேயன்போலிருக்கிறதெ ன்றுவெளியே தள்ளி கதவை யடைத்துக் கொண்டார்கள். ஆக இந்த 5 பேருர் தலைவதுகொண்டு பூமிதுப்பறவாகி நோவினை என்னும் கையும் சூவயாகிவிட்டது.

நபிஸல்லல்லாகு அலைகிவஸல்லம் திருவுளமானர்கள் உங்கள் துன்யாவில் நின்றும் என்னளவில் உசப்பானது 3 காரியம் அதாவது ஹலாலான பெஞ்சாதிகளும் 2வது வாச ங்களும் 3வது தொழுகையில் என்னுடைய கண் குளிர்ந்தி ருப்பதுமென்றறிவாயத்துவருகிறதுதாலூத அலைகிஸ்ஸலாமு க்கு நிகாஹுசெ பெஞ்சாதி 100 பேரும் 300 சுர்ரிய்யத்தும் இருந்தது. அவர்கள் மகனர் சுலைமான் அலைகிஸ்ஸலாமு க்கு 300 பெஞ்சாதியும் 700 சுர்ரிய்யத்துமிருந்தது. நபி நாயகத்துக்கு ஜிமாயில் சுவர்க்கத்துடைய ஆண்பிள்ளைகளில் 100 பேருடைய குவ்வத்தை அல்லாகுத்த ஆலா கொடுத்தி ருந்தான். சுவர்க்கத்துடைய ஆண்பிள்ளைகளில் ஒருவனு க்கு துன்யாவுடைய ஆண்பிள்ளைகளில் நின்றும் 4000 பேரு டைய குவ்வத்தாச்சுது. சுலைமான் அலைகிஸ்ஸலாமுக்கு துன் யாவுடைய ஆண்பிள்ளைகளில் நின்றும் 100 பேர் அல்லது 1000 பேருடைய குவ்வத்தை கொடுக்கப்பட்டிருந்தது. இன்னும நாயகம் ஸல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்களு

க்கு 11 பீவிமார்கள் உண்டாயிருந்தார்கள். அவர்களாவது கதீஜா, ஆயிஷா, ஸௌதா, ஹப்ஸா, ஜைனபு, உம்முஸல்மா ஜைனபு வேறே ஜௌரிபா, றம்லா, ஸபிய்யா, மைமூனா, சுர்ரிய்யத்து 2 அவர்களாவது மாரியத்து றைஹானத்தாயிருக்கும்.

இன்னும் நாயகம்ஸல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்கள் ஹிஜ்ரத்து முதல் கடைசி வரையிலும் நடத்திய யுத்தங்கள் 86 யிருக்கும் அதில் சிறிய யுத்தம் 58 பெரிய யுத்தம் 28 அதில் வெட்டப்பட்ட யுத்தம் 9 அதில் 1வது ஹிஜ்ரத்து 2ம் வருஷம் றமலான் மாதத்தில் நடந்த பத்ருல் குப்ரு என்னும யுதம் இதற்கு ஸஹாபாக்கள் 313 அல்லது 14 அல்லது 15 காபிர்கள் 1000 ஷஹீது 14 காபிர்களில் வெட்டப்பட்டவர்கள் 70. 2வது ஹிஜ்ரத்து 3ம் வருஷம் ஷவ்வால்மீ"த்தில் நடந்த உஹுதென்னும் யுத்தம் இதற்குப் போன ஸஹாபர்க்கள் 700 காபிர் 3000 ஷஹீது 72 காபிர்களில் வெட்டப்பட்டவர்கள் 54.

3வது ஹிஜ்ரத்து 5ம் ஹி ஷாபான்மீ"த்தில் நடந்த முறைஸீஹ் என்னும் யுத்தம் ஸஹாபாக்கள் 30 காபிர்கள் 70 ஷஹீது 1 காபிர்களில் வெட்டுப்பட்டவர்கள் 10. 4வது அதே ஹிஜ்ரி 5ம் ஹி ஷவ்வால்மீ"த்தில் நடந்த அஹ்ஸாபென்னும் கந்தக் யுத்தம் ஸகாபாக்கள் 1000 காபிர்கள் 1200 ஷஹீது 6 பிணம் 3 5வது அதே ஹிஜ்ரி துல்காயிதாமீ" நடந்த பனூகுறைலத்தென்னும் யுத்தம் ஸகாபாக்கள் 3000 காபிர்கள் சுமார் 10,000 த்துக்குமேல் ஸஹீது 1 பிணம் 10 க்கு கீழ். 6வது ஹிஜிரி 7ம் ஹி முஹற்றம்மீ"த்தில் நடந்த கைபரென்னும் யுத்தம் ஸஹாபாக்கள் 1600 காபிர்கள் சுமார் 10000 த்திற்குமேல் ஷஹீது 15 பிணம் 93. 7வது ஹிஜிரி 8ம் ஹி றமலான்மீ"த்தில் நடந்த மக்கம் பத்ஹூ யுத்தம் ஸஹாபாக்கள் 10,000 காபிர்கள் சுமார் 20,000 த்திற்கு மேல் ஷஹீது 2 பிணம் 100க்குமேல். 8வது அதே ஹிஜிரி ஷவ்வால் மீ"த்தில் நடந்த ஹுனைன் யுத்தம் ஸஹாபாக்கள் 12,000 காபிர்கள் 30,000 ஷஹீது 4 பிணம் 370. 9வது

அதே ஹிஜ்ரி அதேமீ நடந்த தாயிப் யுத்தம் ஸஹாபாக்கள் 10,000 த்திற்குமேல் காபிர்கள் கணக்கில்லை ஷஹீது 12 பிணம் நிச்சயமில்லை. ஆக ஷஹீது 127 பிணம் 550க்கு மேல் இதுவாகிறது.

நாயகமும் ஸஹாபாக்களும் சேர்ந்து நடத்திய பெரிய யுத்தம் 28 லாயிருக்கும். இதில பாக்கி 19ம் சண்டையில்லாமல் எதிரிகள் வளிப்பட்டுக்கொண்டார்கள். ஸஹாபாக்களுடையயுத்தம் 58ல் 32ம் ராஷியாயிட்டார்கள் பாக்கி26 யுத்தத்தில் ஷஹீது 100த்துக்கு மேல் பிணம் 1000த்துக்கு மேல். நாயகம் ஸல்லல்லாகு அலைகிவஸல்லம் உபாததான பிறகு 2 வருஷமும் 4 மாதமும் அபூபக்கர் ஸவித்திசகுறலியல்லாகு அன்கு அவர்களுக்கு கிலாபத்து உண்டாயிருந்ததில் 7000த்துக்குமேல் காபிர்களை வெட்டப்பட்டது. அதில் நின்றும் 13 வருஷம் உமருப்னுல் ஹத்தாப்றலியல்லாகு அன்கு அவர்களுக்கு கிலாபத்து உண்டாயிருந்ததில் கணக்கிலடங்காத காபிர்களை வெட்டப்பட்டது.

ஷாம்பத்ஹில கைஸர் ராஜனுடைய சொந்தப்படை 1,00000 உண்டாயிருந்ததில் 50,000த்துக்குமேல் வெட்டப்பட்டது. இதுகளுடைய விபரம் முழுதும் அறிய நாடினால் பெரிய கிதாபுகளைப் பார்த்துக்கொள்ளவும். றசூல்ஸல்லல்லாகு அலைகிவஸல்லம் திருவுளமானார்கள். சொர்க்கத்துடையவர் திரண்டு இரண்டு ரெண்டு வாலிபர் அவர்களுக்கு தலையிலும் கண்ணிலும் இருபுருவத்திலும் முடியிருக்குமே தவிர ஆனத்திலும் கமுகட்டியிலும் மயிர் கிடையாது. அவர்கள் தகப்பனார் ஆதமுடைய நீளம் 60 முழத்திலும் மற்யமுடைய மகன் ஈஸாவுடைய வயசான 33லும் இருப்பார்கள்.

இன்னும் அவர்கள் நிறம் வெளுத்தவர்கள் ஆடை பஷுந்தவர்கள். அவர்களிலொருவனுக்கு ஒரு நேரத்தில் 100 பறவை வரும். அதிலொரு பறவை அவனைப்பார்த்து அல்லாகுத்தஆலா உடைய வலியே நான் ஸல்ஸபீல் என்னும் சுனையில் குடித்தேன். அற்ஷின்கிழ் சுவர்க்கத்து பூங்கா

வில் மேய்ந்தேன். நான் எண்ணத்துலையாத கனிகள் பொஷி த்தேன் என்னை நீர் பொஷியுமென்று சொல்லும் அவன் பொஷிப்பான் அந்தப்பறவையுடைய ஒரு பக்கம் பொரித்த தாயும் ஒரு பக்கம் சுட்டதாயுமிருக்கும்.

இன்னும் ஒரு நிறம்போல் மருநிறமில்லாத, 70 பட்டு அவன் அணிந்திருப்பான் என்று சொன்னார்கள். அபுல்லை துல்ஸமர் கன்தீறஹ்மதுல்லாகு சொன்னார்கள். ஒருவன் இந்த பாக்கியம் பெற நாடினானாகில் அவன் 5 காரியத்தை பத்திப்பிடிக்கவும் 1வது தன்னப்ஸை பாவத்தை விட்டும் விலக்கவும் 2வது துன்யாவில் நின்றும் கொஞ்சத்தைக்கொ ண்டு பொருந்தவும் 3வது வணக்கத்தில் அவள் கைவைத்து சகலவணக்கத்தையும் பிடிக்கவும் 4வது ஸாலிஹீன்கள் உல மாக்களோடு கலந்திருக்கவும் 5வது மிகுதம் துஆ கேட்டு ஒடுக்கத்தை ஹைரைக்கொண்டு முத்திரையாகும்படி சொர் க்கத்தை தரும்படிக்கும் நாயனிடம் கேட்கவும் அல்லா கும்ம அல்ஹிம்னுபில் ஹாத்திமதிஷ் ஷ்ஹாததி.

இன்னும் சுவனத்தில் 8 வகை குடிப்புண்டு. அதில் 1வது தண்ணீரும் 2வது பாலும் 3வது மதுவும் 4வது தேனும் 5வது ஸல்ஸபீலும் 6வது ஸன்ஜபீலும் 7வது தஸ் னீமும் 8வது றஹீகுன்மஃதூமும் ஆக பெட்டாயிருக்கும். இன்னும் சொர்கவாதிகளுக்கு தங்கமோதிரம் முத்து மோ திரம் வெள்ளி மோதிரம் மாணிக்க மோதிரம் மரகத மோ திரம் வயிர மோதிரங்களைக் கொண்டுவந்து ஒவ்வொருவரு க்கு 10 மோதிரம் போடுவார்கள் ஒவ்வொரு மோதிரத்தி லும் அவர்கள் சுவனத்திலெக்காலமும் தரித்துயிருக்கிற தின்பேரில் அறிவிக்கிற ஒவ்வொரு ஆயத்தெழுதப்பட்டிரு க்குமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சுவனத்திலெக்கா லமும் தரித்து யிருக்கிறதின்பேரில் அறிவிக்கின்ற ஒவ் வொரு ஆயத்தெழுதப்பட்டிருக்குமென்றும் சொல்லப்பட் டிருக்கிறது. சுவனத்தின் வாயல்கள் 8 ஆயிருக்கும் 1வது தாருஸ் ஸலாம் 2வது ஜன்னத்துல்மாவா் 3வது ஜன்னத்துல் குல்து 4வது ஜன்னத்நன்னயீம் 5வது ஜன்னத்துல் பிர்

தௌஸ் 6வது ஜன்னத்துல் கறார் 7வது ஜன்னத்துல் அதன் 8வது ஜன்னத்துல் வஸீலா இன்னும் கியாமத்து நாளுக்கு யௌமுல்ஹஷ்ரு யௌமுன்னதாமா யௌமுல்முஹாஸபா யௌமுல்முனாகஷா யௌமுல்ஸல்ஸலா யௌமுத்தம்தமா யௌமுஸ்ஸாயிகா யௌமுல்வாகிஆ யௌமுல்காரிஆ யௌமுர்ராஜிபா யௌமுர்ராதிபா யௌமுல்ஹாஷியா யௌமுத்தாஹியா யௌமுல்ஹாக்கா யௌமுத்தாம்மா யௌமுஸ்ஸாஹ்ஹா என்று இந்தப்பதினாறு முதல் 121பேர்களை அஷ்ஷைகுல் அல்லாமத்து முஹம்மதுல் கஸ்ஸாலீ றஹ்மகுல்லா அவர்களுடைய இஹ்பா உலூமுத்தீன் 4வது ஜில்துருப்ஹூல் முன்ஜியாத்தில் சொல்லியிருப்பதுபோல் சுவர்க்கலோகத்திற்கும் பாபுல் யீமானென்றும் பாபுஸ்ஸலாத்தென்றும் பாபுஸ்ஸௌமென்றும் பாபுல்ஜிஹாதென்றும் பாபுஸ்ஸதகாவென்றும் பாபுஸ்ஸப்ரென்றும் பாபுஸ் ஸூஹ்தென்றும் பாபுல்லுஹாவென்றும் இப்படி ஒவ்வொரு அமல்களை சேர்ந்த வாசல்களுமுண்டு.

இதுபோன்றே நரகத்துக்கு ஜஹன்னம்லளா, ஹூதமா, ஸயீரு, ஸகரு, ஜஹீம், ஹாவியா இப்படி 7 தட்டாயிருந்தாலும் இதுகளுக்கும் முன் சொல்லப்பட்டதுபோல் ஒவ்வொரு அமல்களைச்சேர்ந்த வாசல்களுண்டாயிருக்கிறது. அதாவது தாருல்ஹலப்தாருல் அதாப்தாருஸ்ஸூக்த்து தாருல் ஹூஸூன் பாபுஷ்ஷிற்கு பாபுஸ்ஸினு பாபுர்ரிபா பாபுல்லுல்மு என்றிவ்விதமாயிருக்கும் இனிமுன் சொன்ன 7 தட்டில் முந்தின தட்டாகிய ஜஹன்னத்தில் இந்த உம்மத்துக்களாகிய பாவிகளில் சிலரை ஒரு நொடி நேரம் சிலரை ஒரு ஸாஅத்து சிலரை 1 நாள் சிலரை 1 கிழமை சிலரை 7000 வருஷம் இவ்விதமாக அவரவர்கள் செய்த பாவத்தின் விகிதப்படி கத்ருக்கு அதாபு செய்யப்படும். 2ம் தட்டாகிய லலாவில் எஹூதிகளை அதாபு செய்யப்படும் 3ம் தட்டாகிய ஹூதமாவில் நஸாறுக்களை அதாபு செய்யப்படும். 4ம் தட்டாகிய ஸயீரில் நஸ்றாக்களிலொரு கூட்டத்தை அதாபு செய்யப்படும், 5ம் தட்டாகிய ஸகரில் மஜூஸிகளை அதாபு

செய்யப்படும். 6ம் தடாகிய ஜஹீமில் புத்தைவணங்குகிற வர்களை அதாபு செய்யப்படும். 7ம் தட்டாகிய ஹாவியாவில் முனாபிகீன்களை அதாபு செய்யப்படுமென்று வந்திட்டது.

இனி முந்தின தட்டிலுள்ளவர்கள் யாஹன்னான் யாமன்னான் என்று கூப்பிடுவார்கள் 2ம் தட்டிலுள்ளவர்கள் எங்கள் நாயனே எங்களை மூதேவித்தனம் மிகச்சிட்டுது என்று கூப்பிடுவார்கள். 3ம் தட்டிலுள்ளவர்கள் நாயனே இதை விட்டும் எங்களை பிறத்திப்படுத்திவை நாங்கள் இனிமேல் பாவம் செய்தால் அனியாயக்காரராக யிருக்குமென்று கூப்பிடுவார்கள். 4ம் தட்டிலுள்ளவர்கள் எங்கள் நாயனே எங்கள் நப்ஸுகளை அனியாயம் செய்தோமென்று கூப்பிடுவார்கள். 5ம் தட்டிலுள்ளவர்கள் நாயனே முடுகிய தவனை வரையில் எங்களை பிப்படுத்தி வையென்று கூப்பிடுவார்கள் 6ம் தட்டிலுள்ளவர்கள் உங்கள் நயனை கூப்பிடுங்கள் கூப்பிட்டால் நம்மை விட்டும் ஒரு நாளையில் அதாபை லேஷாக்குவானென்று கூப்பிடுவார்கள். 7ம் தட்டிலுள்ளவர்கள் மாலிக்கே உம்முடைய நாயன் எங்கள் மேல் மௌத்தை கற்பிக்கட்டுமென்று கூப்பிடுவார்கள் அதற்கு மாலிக்கு திட்டமாக நீங்கள் இந்த அதாபில் தரிப்பட்டவர்களாயிருக்குமென்று சொல்வார்களென்று வந்துவிட்டது.

இதுநிற்க இனி நம்மள்பேரில் இரக்கப்பட்ட இஸ்முகளாகிறது லாஹிறென்றும் பாதினென்றும் 2வகையாயிருக்கும் யஃனீ வெளிறங்கம் உள்றங்கமென்றது அப்பொழுது லாஹிரைக்கொண்டு நம்முடையவெளிறங்கத்தையும் பாத்தினைக்கொண்டு நம்முடைய உள்றங்கத்தையும் துப்பரவாக்கும்படிம்ப ம்யவிறுமெனன்றும் ஷை 2இல்மைக்கொண்டும் அமல்செய்வதால் இல்முல்ஹகீகத்தென்று 3வதாக ஒரு இல்மு புறக்குமென்றும் அதெவ்விதமெனில் மரமும் இலைகளுமுண்டாயிருக்குமாகில் அம்மரத்திலோர் கனி உண்டாவது போலென்றும் அப்படிக்கில்லாமல் லாஹிறுடைய இல்மை மாத்திரம் அறிந்தவர்கள் இலைகனில்லாத மரங்கள் எவ்விதம் சாப்பபதில்லையோ அவ்விதமே அவர்களும் ஹகீகத்

துடைய இல்மை எத்தார்களென்றும் ஹகீகத்துடைய இல்மை எப்பொழுது எத்தவில்லையோ அப்பொழுதவர்களுடைய நாட்டத்தளவில் சேரமாட்டார்களென்றும் ஆகபால் நிறப்பமாகிய இபாதத்தாகிறது. லாகிற்பாத்தின் 2 கொண்டுமாயிருக்குமென்றும் 2ல் ஒன்றைக் கொண்டு போதுமாக்கிக் கொள்வது போதாதென்றும் முஹியித்தின் அப்துல் காதிர் ஜீலானிறலியல்லாகு அன்கு தங்களுடைய ஸிர்நல் அஸ்றாறெண்ணும் கிதாபு 7 வது பக்கத்தில் கண்டிப்பாக சொல்லியிருக்கிறார்கள். இன்னும் எவனொருவன் ஷை இல்மை சேரவில்லையோ அவன் வெளிரங்கத்துடைய இல்முகளில் ஆயிரமாயிரம் கிதாபுகள் ஓதினாலும் அவன் ஹகீகத்தில் ஆலிமல்லவென்றும் ஏனெனில் அவன் அந்த இல்மைக்கொண்டொழிய நாஹூடைய பாதயை எத்தமாட்டாததாலென்றும் லாஹிநுடைய இல்மைக்கொண்டு செய்கிற ஜிஸ்மானியளவில் சேர்க்கப்பட்ட அமலைக்கொண்டு சுவர்க்கம் மட்டும்தான் கிடைக்குமென்றும் குர்பிய்யத்தெண்ணும் ஹக்குடைய சமுகத்தில் முடுகுதல் பெறுனென்றும் லாகிற்பாதின் 2 கொண்டும் அமல் செய்கிறவன்தான் ஷை ஆலத்தை சேருவானென்றும் ஷை கிதாபு 16 வது பக்கத்திலும் கண்டிப்பாக சொல்லியிருக்கிறார்கள். இன்னும் யாறாகிலுமொருவன் 2ல் ஒண்ணைக்கொண்டு பொருந்துவானாகில் அவன் அல்லாகுத்த ஆலாயிடத்தில் குர்பிய்யத்தை தட்டப்பட்டவனாயிருக்கும் தறஜாத்தை தட்டப்பட்டவனல்லவென்றும் இன்னுமவர்கள் குர்பிய்யத்தை தேடுகிறவர்களாயிருக்க அதளவில் சேரமாட்டார்களென்றும் அவர்கள் அவிள்க்கை வைக்கப்படாததை அவிள்கை வைத்ததாலும் ஒரு இறக்கைமட்டும் உள்ளவர்களாயிருப்பதாலுமென்றும் ஷைகிதாப் ஷைபக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் அல்லாகுத்தஆலா உடைய பொருத்தமாகிறது. தன்னுடைய அடிமையை அவனுடைய குர்பிய்யத்தளவில் கடத்தாட்டுவதாயிருக்குமென்றும் இன்னும் தறஜாத்தளவில் திரும்பிப் பார்க்க மாட்டானென்றும் ஷை கிதாப் 22 வது பக்கத்தில் தலீலுடன்

விவரித்திருக்கிறார்கள். இன்னும் இன்ஸானுகிறவன் துவக்கமாக ஷரீஅத்துடைய இல்மளவில் ஜிஸ்முடைய மஹ்ரிபாஹாஸிலாக்குவதற்காகவும் 2 வது பாத்கினுடைய இல்மளவில் றூஹைஹாஸிலாக்குவதற்காகவும் ஹாஜத்தானவனுயிருக்குமென்றும் மஹ்ரிபா 2 வகையாயிருக்கும். 1 வது ஹக்குடைய ஸிபத்துகளை அறிவது. அது ஜிஸ்முடைய பாரிஷத்தாலாயிருக்குமென்றும், 2 வது ஹக்குடைய தாத்தை அறிவது அது றூஹுடைய பாரிஷத்தாலாயிருக்குமென்றும் ஷை கிதாப் 7 வது பக்கத்தில் வருகிறது. பாட்டு வகைகேடு நப்ஸுடைய மார்க்கமதை விட்டு மனம்றூஹுடைய றஸ்தாவை நீ நோக்குவது மென்னுளோ=இன்னும் அகப்பார்வையுடையவர்களால் றூஹுடைய கண்ணை ஹாஸிலாக்கிக்கொள்வது இன்ஸான் பேரில் வாஜிபாயிருக்குமென்றும் ஷை கிதாப் 6 வது பக்கத்திலும் மேல் சொல்லப்பட்ட மர்த்தபாக்கள் ஹாஸிலாகமாட்டாது. கலப்பற்ற தௌபாவைக்கொண்டும் தல்கீனுடையவர்களால் தல்கீன் பெருவதுகொண்டு மொழியவென்று ஷை கிதாப் 17 வது பக்கத்திலும் கல்புடைய கண்ணாடியில் அல்லாகுத்தஆலா உடைய ஸிபத்துக்களை நோட்டமிடுதலென்னும் முஷாகிதா ஹாஸிலாகமாட்டாது. ஒப்புக்கொள்ளப்பட்ட ஹக்களவில் சேர்ந்த ஷைகுடைய தல்க்கீனைக் கொண்டொழிய வென்றும் நபிமார்கள் அவாம் ஜெனங்களுக்கும் கவாஸீங்களுக்கும் நேர்வழிகாட்டுகிறவர்களென்றும், ஒலிமார்களப்படியல்ல

கவாஸிங்களுக்குமட்டும் நேர்வழி காட்ட அனுப்பப்படுகிறவர்களென்றும், ஷை கிதாப் 20 வது பக்கத்திலும் கல்புகளை ஹயாத்தாக்கி, அதைக்கொண்டு அதுடையறப்பை அறியப்படுமே. அப்போல்கொத்த றூஹைஹாஸிலாக்குவதற்காக முர்ஷிதை தேடுவது விதியாயிருக்குமென்று ஷை கிதாப் 52 வது பக்கத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும் ஸையித்து முகம்மது ஹக்கீய்யின்னுஸிலீ இமாம் தங்களுடைய கஸீனத்துல் அஸ்றுறென்னும் கிதாபு 190 வது பக்கத்தில் திடனுக ஒரு மனிதன் அவனளவில்

வஹீ அறிவிக்கப்படுமோகிலும் அவனுக்கு ஷைகுண்டாயிருக்கவில்லையானால் சிர்ருகளில் நின்றும் யாதொன்றும் அவனளவில் வராதென்று அபூஅலித்தக்காயிகுறஹமகுல்லா சொன்னார்களென்றும் இன்னும் எவனொருவனுக்கு ஷைகு இல்லையோ அவனுடைய ஷைகு ஷைத்தானாயிருக்குமென்றும் அபூயவீதில் பிஸ்த்தாமிறஹமகுல்லா சொன்னார்களென்றும் இன்னும் எவனொருவனுக்கு ஷைகு இல்லையோ அவன் ஷைத்தானுக்கு வசப்படுத்தப் பட்டவனாயிக்குமென்று அபூஸயிது முஹம்மது காதிமீறஹ மகுல்லா சொன்னார்கள் களென்றும் சொன்னார்கள்.

இதுகளைப் பற்றி விஸாலமாயெழுத இச்சிறு புத்தகம் இடம் கொடாத்ததால் பார்க்குகிறவர்களுக்கு அதளவில் ஆசையுண்டாகி அந்த இல்மை தேடும்பொருட்டும் இன்னும் இப்புத்தகத்திற்கு இது ராஹாயிருக்கும்பொருட்டும் இந்த மட்டில் கொஞ்சமெழுதினேன். இதுகளை ஆருய்ச்சிசெய்து இவ்வுலகிலேயே அறியாத கண் குருடனாகிறவன். ஆஹிரத்திலு குருடனாகவும் வழிகெட்டவனாகவு மிருக்குமென்று அல்லாஜல்லஷானுகுவதஆலா குர்ஆனில் திருவுளமபற்றினான் ஆகையால் அல்லாகுசுப்ஹானஹூவதஆலா நம்மனைவர்களையும் இவ்வுலகிலேயே முளிப்புப்பெற்ற கூட்டத்திலாக்கி நம்முடைய நாட்டங்களையும் நிறை வேற்றி தந்தபின் மௌத்தாக்குவானாகவும். ஆமீன்யாறப்பல் ஆலமீன் இந்த புஸ்த்தகம் ஹிஜ்ரி 1335 வருஷவ்வால் மீ கடைசியில் ஆரம்பித்து துல்ஹஜ்ஜூ மீ 9 வ சங்கை பொருந்திய அறபா உடைய நாளில் முடிவு மெற்றது. முனாஜாத் அஹ்மதி.

1 அல்லாகு அல்லா அல்லாகு அல்லா
அல்லாகு அல்லா அல்ஹம் துலில்லா

2 நானென்ன செய்வேன் நபியாறசூலே
ஏனோவெம்மீதி லிரங்கிடக்காணேன் நா

3 கோணவன் தூதா குணமுள்ள நாதா
ஏனோவெம்மீதி லிறங்கிடக்காணேன் நா

4. ஆசைக்கடலே அலையின்றிறளே
கூசாதென்மீதே கருணைசெய்வீரே (நா)

5. என்கண்மணியே ஏன்றாஹின்பிதாவே
குன்னெண்ணும் சொல்லால்-குணமாய் வந்தோரே (ந

6. நாயன் குர்ஆனில் நலமானஹாவில்
ஒயாப்புகழாய் புகழ்ந்த நபியே (நா)

7. தம்பமெண்டொதுங்கும் தாழ்பரமானோர்
துன்பம் துயரம் தீர்க்கும் நபியே (நா)

8. வானமமைத்த வல்லானுறைத்த
மோனம் தரிக்க வருள்புரிவீரே (நா)

9. கண்டாருங்களே காதல்கொண்டோர்கள்
கண்டிடயானும் கருணைசெய்வீரே (நா)

10. உங்களின் நாமம் உடையவன் நானே
உங்களிலென்னை பாழாக்குவீரே (நா)

11. பாழாம்பனுவாய் பகாபெற்றிருக்க
வேழைவாய்த்திட்ட வருள்புரிவீரே (நா)

12. கல்லாதமூடன் கலங்கி நிற்பவன்
பொல்லாவினையை போக்கிவைப்பீரே (நா)

13. ஓடியலைந்தே யொருவனைக்கண்டே
வாடாதிருக்க வருள்புரிவீரே (நா)

14. ஐயோ நான் பாவி ஆகாதுரோகி
பொய்யாய் புலம்பும் புல்லன் மூதேவி (நா)

15. ஆசையுள்ளாரை ஆதரிப்போரே
கூசாமலென்னை கைபிடிப்பீரே (நா)

16. ஆகச்சேதோஷி அஹ்மதாம் ஆவீ
யீகைவைத்தெம்மை யீடேற்றுவீரே (நா)

நவீன வாசகத்திரட்டு முற்றிற்று.

ஜவாஹிறெ அஹமதீ.

பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.

இதுவாகிறது.

அடமங்குடி தர்ஹாவில் அடங்கியிருக்கும் ஹஜ்ரத்து சைய்யது மஹமூதுஷாஹ் வலியுல்லா அவர்கள் பேரில் ஆஜிஸ் பிரிஞ்சி அஹ்மதிப்னு முகம்மது ஸாஹிபுல் மலைபாரிப்பில் மன்பாத்தி ஸல்லமஹுல்லாஹு அவர்களால் ஹிஜ்ரீ 1335ம் வருஷம் ஷஅபான் மீ௴த்தில் சொல்லப்பட்டு அதே மாசம் 9ம் தேதி வெள்ளிக்கிழமை இரவு வலங்கிமான் மதரஸே மஸ்ஜிதிய்யாவிலும் 12ம் தேதி திங்கட்கிழமை இரவு அடமங்குடியில் ஷை ஹஜ்ரத்து அவர்கள் தர்ஹாவிலும் அரங்கேத்தப்பட்ட கவிதாவாயிருக்கும்.

வலிகளில் வருஷையுள்ளவர்
நபிநாயகம் வழியானவர்
மஹமூது ஷாஹ் வலியானவர்
அவர்கள்மேல் றஹமத்தாக்கல்லா 1

மேன்மையில் மிகசிறந்தவர்
நல்ல தகுதி வஜுப்பமுடையவர்
அடமங்குடியை உடையவர்
எங்கள் மஹமூது ஷாஹ்வலியானவர் 2

ஆரிப் பில்லா வானவர்
ஆஷிக்பில்லாவானவர்
ஹாதீபிலல்லாவானவர்
எங்கள் மஹமூது ஷாஹ்வலியானவர் 3

மஹபூபுஸ் ஸுபுஹானுனவர்
மஃஷூக்கு றஹ்மானுனவர்
மஃதனே அஸ்றாருனவர்
எங்கள் மஹமூது ஷாஹ்வலியானவர் 4

மனுஜின்கள்க் கொலியானவர்
மன்னவன் றஹ்மத்துடையவர்
எனது கண்மணியானவர்
எங்கள் மஹமூது ஷாஹ்வலியானவர் 5

ஷரீஅத்தாங் சப்பலேறியே
    தரீகத்தக் கடல்கூடியே
மஃரிபத்தக் கடல் முழுகியே
    எங்கள் மஹமூது ஷாஹ்வலியானவர் 6
முழுகியே முத்தைக்கண்டவர்
    முஹப்பத்துடன் எடுத்திட்டவர்
மேலாம் மகாமை அடைந்தவர்
    எங்கள் மஹமூது ஷாஹ்வலியானவர் 7
கண்டால் மஜ்னூன்போலவே
    கனத்த மஜ்துபாகியே
எந்தன் குத் பொலியாகிய
    எங்கள் மஹமூது ஷாஹ்வலியானவர் 8
தாருல்பனுவை தள்ளியே
    தாருல் பகாவழி கூடியே
நேருனபாதை தேடியே
    எங்கள் மஹமூது ஷாஹ்வலியானவர் 9
இல்முல் யகீனை கடந்தவர்
    ஐனுல் யகீனும் அறிந்தவர்
ஹக்குல் யகீனுடையவர்
    எங்கள் மஹமூது ஷாஹ்வலியானவர் 10
ஆமில்காமிலானவர்
    அல்லாமருத்திபுடையவர்
பூலோக வாழ்வை மறந்தவர்
    எங்கள் மஹமூது ஷாஹ்வலியானவர் 11
வலியின் ஹாலே அறிந்திட
    விளக்கில் தண்ணி சொரிந்திட
பொலிந்திடா,சுது மெரிந்திட
    எங்கள் மஹமூது ஷாஹ்வலியானவர் 12
நவாபின் வயற்றுவலியை தான்
    நீக்கிவைத்தான் நாயன்தான்
இவைபோல் மிகுத்தவர் கருமத்தால்
    எங்கள் மஹமூது ஷாஹ்வலியானவர் 13

அவர்கள் ஹாலின் அழகென்ன
　　அவர்கள் தகுதி குணமென்ன
அவர்கள் கபுரின் ஒளிவென்ன
　　எங்கள் மஹ்மூது ஷாஹ்வலியானவர் 14

நர்பவழக்கொடி யானவர்
　　நேருண சாதாத்தானவர்
இறையுகந்த நாயகர்
　　எங்கள் மஹ்மூது ஷாஹ்வலியானவர் 15

ஜமாதில் அவ்வல் மாசத்தில்
　　இருபத்திரெண்டாம் தேதியில்
நேமமா நடக்கும் ஸந்தல்
　　எங்கள் மஹ்மூது ஷாஹ்வலியானவர் 16

காளீகத்திபும் கூடியே
　　கத்தம் பாத்திஹா ஓதவே
ஏழைகட்க்கன்னம் போடவே
　　எங்கள் மஹ்மூது ஷாஹ்வலியானவர் 17

நாமம் ஷிரிஞ்சி அஹ்மதாம்
　　நலவாக யிக்கவி சொன்னதாம்
கோமானருள் பொங்கும் ஜாஹிதாம்
　　எங்கள் மஹ்மூது ஷாஹ்வலியானவர் 18

பாவி யிக்கெதியானனே
　　பலபாக்கியங் குறைவானனே
ஏழைக்கிரங்கிட காணனே
　　எங்கள் மஹ்மூது ஷாஹ்வலியானவர் 19

இறங்கி எனக்கருள் புரியவே
　　எனது மனக்குறை தீரவே
உறக்கம் தெளிந்திட செய்யவே
　　எங்கள் மஹ்மூது ஷாஹ்வலியானவர் 20

சஙகை பொருந்திய வைகவர்
　　சகலர்க்கும் வலியானவர்
எங் கைபிடித்தென்னை காற்பவர்
　　எங்கள் மஹ்மூது ஷாஹ்வலியானவர் 21

ஏதுமில்லாப்பாவிஞன்
ஏழையுங்களை நம்பிஞன்
பாதுகாப்புத் தேடினன்
யாசைய்பது மஹமூதுஷாஹ்வலீ 22
ஜெகமிதிலென் பிழைதீரவே
ஜெகதகுரு வெங்கள் நீதமே
புகலுமையன்றியில்லை நாதமே
புகழோங்கும் மஹமூது ஷாஹ்வலீ 23
ஸகலரும் நபிபேரிலே
ஸலவாத்து சொல்லவும் ஆவிலே
ஸஹபோறடங்கலின் பேரிலே
றலியல்லாஹ்மஅ ஷாஹ்வலீ 24
ஆக பாட்டு 24 ஹிஜ்ரி 1335 ஷ அபான் மீ

முஞஜாத்து அஹமதீ

கல்லார்க்கும் கற்றவர்க்குமென்னும் மெட்டு.

ஸலாத்துல்லா ஸலாமுல்லா அலாதாஹாறசூலில்லா
ஸலாத்துல்லா ஸலாமுல்லா அலாயாஸீன்ஹபீபில்லா
அல்லாஹு யாஷாபி யாக்காபி வல்லவனே
அடிமையெனை அன்புடனே ஆதரித்து காப்பவனே
பாக்கத்தும் வாழ்வுமெனில் வெகுமதியாய் தந்தெனமையின்
பாத்தினிலும் லாகிரிலும் வாகாக்கு வல்லவனே
தானவனே தனியவனே தன்புரானவனே
தந்தை தாய தாரமொன்றும் வந்ததியுமில்லானே
தருவுக்குடையவனே தானீயில்லாதவனே
தாபித்தாய் நிற்பவனே தயவெமெயிலாக்கிடுவாய்
ஜெகமீதிலென்பிழையை ஜப்பாரே நீ பொறுத்து
ஜாஹுடையனேஞரால் ஜெயமாக செய்திடுவாய்
ஹக்கான மார்க்கமிதை ஆராய்ச்சி செய்தெழியோன்
ஹாலும் பிக்ஹுமதால் அழக செய்திடுவாய்

ஷைகசான நாயகரின் காரணத்தால் யென்பிழையை
கல்லாகே நீ பொருத்து காலமெல்லாம காத்திடுவாய்
தப்பானே என் பிழையை தயவாக நீ பொருத்து
திரேேரின்முன் சபையில் தாயிமாயாக்கிடுவாய்
தார்த்தில் மறைந்துவலி பாத்தில் வெளியானவனே
தாத்தும்வலி பாத்தும்ஜ லால் ஜமால் ஆனவனே
றப்பான நாயகனே றஹ்மானே உந்தனுட
றஹ்மத்தால் எந்தனையே றட்சித்து காத்திடுவாய்
ஸல்லத்தா வாராது ஜீனத்தாய் யானிருக்க
ஜமானுடையோர் பித்னுவின் ஜல்ஜலத்தை நீக்கிடுவாய்
ஸதாகாலமிவ்வுலகை ஸதமென்றிருமல் யான்
ஸத்தாரே யுந்தனிலே ஸார்ந்திடவே செய்திடுவாய்
ஷபீஉனு செய்யிதனு மௌலானு முஹம்மதரின்
ஷபாஅத்தி லாக்கியெமை சொர்க்கமதில் சேர்த்திடுவாய்
ஸாயிமுத்தஹ்ற் காயிமுல்லேல் ஸாபிரீனகள் கூட்டமதில்
ஸாஹிபுல் மன்பாத்தியெமை சேர்த்திடுவாய் ஆண்டவனே
லலாலத்தும் லயீபத்தும் லீகத்தும் வாருமல்
லார்றேநீ எந்தனிலே லஹூரத்தை காத்திடுவாய்
தய்யிபாத் என் கல்பை தாஹிறத்தாக்கியபின்
தாஹாறகூஸ் நபியின் திருஒளியை காட்டிடுவாய்
லபீ என்னும் மானுக்கு லாமினாய் நின்டவரின்
லன்னை யான் கொண்டிரவில் நித்திரையில்லாதானேன்
அலமுல்ஹூதாநபியின் ஆஷைபினால் என் கல்பு
இல்லத்தாய் மிகவாடி ஆஜீஸாய் விட்டதுவே
ஹப்பாறே எந்தனுக்கு ஹனீமத்தாய் யிவ்வுலகில்
ஹனியான நாயகரின் கண்காட்சி காட்டிடுவாய்
புர்க்கான் அலீம்பொருட்டால் பைகாம் பர்நம்பொருட்டால்
பத்தாஹே என் நாட்டம் பத்ஹாக்கி தந்திடுவாய்
கபுரில் படுந்துயரம் கஷ்டமதை நீக்கி எந்தன்
கபுறை விஸ்தாரமதாய் கனத்தொளிவாயாக்கிடுவாய்
கோனே என்செய்.பிழையை கால்சருகலானதுவை
காணுமலாக்கி யென்னை காத்திடுவாய் ஆண்டவனே

ஸா தானியானவனே ஸாமியாய் நிற்பவனே
ஸானை அதானவன் யான் ஸாபமதாய் யிதை சொன்னேன்
மலேபார் பதிதனிலே மம்பாடாமூர்திலே
முஹம்மது புதல்வன் யான் முஹப்பத்தாய் சொல்லுகிறேன்
நாமம் பிரிஞ்சி அஹ் மதெண்டு சொல்பவன் யான்
நலவாக இக்கவியை நாவாலுரைக்குகின்றேன்
வலங்கைமானன்னகரின் மத்ரஸே மஸ்ஜிதியில்
வாகாயிருக்கையிலே வகையாயிதைப் பணிதேன்
ஹிஜ்ரா ஓராயிரத்தி முன்னூத்தி முப்பதும்பின்
ஹேயின் துகைபதிலே எழுதி முடித்தனன்காண்
லாயிலாஹா இல்லல்லா லாமௌஜூத இல்லல்லா
லாமக்சூத இல்லல்லா லாமத்லூப இல்லல்லா
யாஸீன் நபி பேரில் யார்கள் ஆல் அனைவரில்
யாஅல்லா நீ ஸலவாத் எப்பொழுதும் சொல்லிடுவாய்
அஸாதித் அகியார்க்கும் அஹபாப் என்தோழர்கட்கும்
இஸ்லாமனைவர்க்கும் உன் கருணை செய்திடுவாய்.

முனாஜாத் முற்றிற்று.

இதுவாகிறது

லால்பேட்டை ஹஜ்ரத் மௌலானா மௌலவி ஷைகு அப்துற்றஹ்மான் ஆலிம் ஸாஹிபு அவர்கள்பேரில் பிரிஞ்சி அஹமதிப்னு முஹம்மது ஸாஹிபு அவர்கள் சொல்லிய,

மத்ஹு மாலை — மஸ்னவிருகம்

எங்கள் லால்ஹான் பேட்டை ஹஜ்ரத்தானவர்
எல்லா தகுதி சங்கை வலுப்பமுடையவர் 1

அவர்கள் ஹாஜி அப்துற்றஹ்மான் ஸாஹிபாம்
அவர்கள் மௌலவி அப்துற்றஹ்மான் சாஹிபாம் 2

அவர்கள் லால்ஹான்பேட்டை மௌலவி சாஹிபாம்
அவர்கள் வாத்தியார் வீட்டு மௌலவி சாஹிபாம் 3

வீடுவாசல் விட்டவர்கள் ஸாஹிதாய்
வெகுநாள்மட்டும் வெளியிற்றிரிந்தார் ஆபிதாய் 4

அமலு மிகுதிசெய்து ஆமிலானவர்
நக்ஷபந்திய்யாவிர் காமிலானவர் 5

மிகுதி இல்மை கற்று அவர்கள் ஆலிமாய்
மிகுதி இறையை அறிந்து அவர்கள் ஆரிபாய் 6

இல்முநஹவிற் கடந்த நஹவியானவர்
இல்முபிக்ஹிர் கடந்த பக்கியானவர் 7

இல்முஹதீஸிர் கடந்த முஹத்தீசானவர்
இல்முஅக்கீதாவிற் தஹ்கீகானவர் 8

இல்முதப்சீரில் முபஸ்ஸிரானவர்
இல்முதிப்பிற் கடந்த தபீபானவர் 9

தஸவ்வுப் இல்மிற் கடந்த சூபியானவர்
ஹகாயிக் இல்மிற் கடந்த மாஹிருனவர் 10

இவர்கள் இல்மு விளையும் தானமானவர்
இவர்கள அமலு விளையும் தானமானவர் 11

இவர்கள் இல்மு சுத்தியாடும் தானமாம்
இவாகள் அமலு சுத்தியாடும் தானமாம் 12

மிகுதி சங்கை தகுதி வலுப்பமுடையவர்
மேலவனில் வாசிலான ஷைகவர் 13

மேமகாமடைந்த முர்ஷிதானவர்
முறப்பியான காமிலான ஷைகவர் 14

ஜத்பு ஙந்து தெளிவளவிர் மீள்பவர்
ஜாஹிலீங்களாகப் பிணியைத் தீர்ப்பவர் 15

ஹக்களவிர் ஆஷைகொண்ட ஆஷிகாம்
கல்குகளை கலந்திராத பாயிகாம் 16

பஞபகாவும் கண்டுபாயிகானவர்
பெரிய மகாமை அடைந்துகொண்ட புண்ணியர் 17

இந்த தகுதியுடைய ஷைகை கெடுத்தொரு
இகட்சியான வார்த்தை சொல்லும் மனிதரும் 18

இவர்கள் நபரில் எந்த விதமானோர்களோ
இவர்கள் எந்த வகுப்புடைய பேர்களோ 19

அவர்கள் சொந்த ஊரிலவர்கள் சேரும்
ஹசனுத்தீன் கமாலுத்தீ னெம்பவர்களாம் 20

இவர்கள் ரெண்டும் ஆலிமைனி ஆரிபைன்
இன்னுமிவர்கள் ஆமிலீனி காமிலீன் 21

இந்த விதமாய் லௌஹிலுள்ள படியினால்
வெளிப்படுத்த எனக்குதவி செய்ததால் 22

நாயனே நானுனை மறக்காமற் சதா
உன்னைப்புகழகிருபை செய்வாய் வாஹிதா 23

இவர்களடங்கல் போல் நானுமாகவே
இறையவா எனக்குதவி செய்குவாய் 24

ஷைகு முகம்மது வேண்டுகோளின்படி யிதை
செந்தமிழிர் செப்பலானேன் கவி யிதை 25

இந்த கவியை செப்பும் பயல் மலை பாரியாம்
இன்னுமவன்மம்பாத்தி அஹமது சாஹிபாம் 26

அவனின் பிழைகள் பொருத்தவனின் நாட்டங்கள்
அடங்கலும் நிறைவேறச் செய்வாய் யாஅதல் 27

இன்னுமவன் மௌத்தாகுமுன் மௌத்தாகவே
இன்னுமவன் முப்பாழும் பாழாய் முடியவே 28

இந்தவிதமாய் செய் துஆவை றப்பனா
நீகபூல் செய்குவாய் யாஹஸ்பனா 29

உந்தன் நபிமேல் அவர்கள் ஆல்கள் பேரிலும்
அஹதவாஸலாத் ஸ்லாமையனுதினம் 30

வானின்மழைகள் பொளியுமாப்போல் சொரிந்திடு
வலுமை அஸ்ஹாப் அத்பா அயும் சேர்த்திடு 31

தம்மத் இந்த பாட்டு முடிவாயிட்டுது
ஹைறன்ஷீன்லாமும் ஹேயின் துகையிலாச்சுது. 32

மத்ஹா மாலை முற்றிற்று

லெக்ஷிமீவிலாஸ பிரஸ், கும்பகோணம்.